# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No. 1 of 2026**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**

**Editor:** R. Bala

**Sovereign Grace Publications**
P O Box 62 159, Sylvia Park,
Auckland 1644, New Zealand
+64 9 272 8061
biblelamp1995@gmail.com
www.biblelamp.org

**Reformed Publications**
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar,
Ayanavaram,
Chennai 600023. South India.
+91 9445671113

“சத்தியத்தைக் கபடமில்லாமல் எடுத்துக்கூறாமலும், கொள்கைப் பஞ்சத்தோடும் இருக்கும் பத்திரிகையை இலக்கியத்தொல்லை என்றுதான் கூறவேண்டும்.”

சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)

# வாசகர்களே!

*வணக்கம் வாசகர்களே!*

*புதிய வருடம் ஆரம்பித்திருக்கிறது. உலகம் பல்வேறு பிரச்சனைகளை ஒரே நேரத்தில் சந்தித்து வருகின்றது. இதை நான் எழுதிக்கொண்டிருக்கும்போதே அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் அநேகர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவுஸ்திரேலியாவில் யூதர்களுக்கெதிரான இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதல்; அமெரிக்காவில் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச்சூட்டினால் மரணம், லொஸ் ஏன்ஜலிஸ் நகரில் இரு முக்கியஸ்தர்கள் படுகொலை. இதெல்லாம் மூல பாவம் மனிதனை எவ்வாறெல்லாம் தொடர்ந்து ஆட்டிப்படைத்து வருகின்றது என்பதற்கான அடையாளங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலம் மனிதனுக்கு வரும் பாவ விடுதலையைத் தவிர இவற்றைச்செய்யும் மனிதர்களுக்கு வேறு விமோசனம் இல்லை. நீங்கள் அதை அடைந்திருக்கிறீர்களா? தனிப்பட்ட வாழ்க்கையில் பாவத்தினால் ஏற்படும் சகல குரோதங்களுக்கும், சாதி வெறிக்கும், வெறுப்புகளுக்கும் எல்லாப் பாவங்களுக்கும் விடுதலை தரக்கூடியவர் இயேசு மட்டுமே; அவருடைய திருஇரத்தம் மட்டுமே நம்மைப் பாவத்திலிருந்து கழுவி எடுப்பதற்காகவும், விசுவாசத்தின் மூலம் நம்மைக் கர்த்தர் முன் நீதிமானாக நிறுத்துவதற்காகவும் கல்வாரியில் சிந்தப்பட்டிருக்கிறது.*

*இந்த இதழில், உலக சமூகங்களையும், முக்கியமாக கிறிஸ்தவ சமூகத்தை ஆளத்தொடங்கியிருக்கும் இணைய சமூக வலைதளங்களைப் பற்றி விளக்கமாக எழுதியிருக்கிறேன். புதிதாக வருகின்ற எல்லாவற்றையும் கேள்வி முறையில்லாமல் அரவணைத்துக்கொள்ளும் பக்குவமில்லாத நம்மவர்களுக்கு உதவவே இதை எழுதியிருக்கிறேன். கிறிஸ்தவர்கள் இன்று நம்மினத்தில் கண்மூடித்தனமாகத் திறன்பேசி (Smart Phone) மூலம் இணையதளத்தில் குளிர் காய்கிறார்கள். திறன்பேசியும், இணையமும், சமூக வலைதளமும் ஒருபோதும் கிறிஸ்துவின் சபையாக முடியாது. அவற்றை சபைகளாக்குகின்ற யெரொபெயாமின் பாவத்தை நீங்கள் செய்யக்கூடாது.*

*மேலும், இரட்சிப்பின் மகத்துவத்துவத்தை விளக்கியும், திரித்துவப் போதனையை விளக்கியும் இரண்டு ஆக்கங்கள் இந்த இதழில் வந்திருக்கின்றன. இந்த இதழைத் தயாரிக்க உதவியிருக்கும், என்னோடிணைந்து பணிசெய்து வருகிறவர்களுக்கும், இதை விநியோகித்து வரும் நண்பர்களுக்கும், உங்களுக்கும் என் புது வருட வாழ்த்துக்களும், நன்றிகளும். – ஆசிரியர்*

# இணையக் கூட்டமா? உள்ளூர் திருச்சபையா?

ஆண்டவருக்கு எதிரி யாரென்று நமக்கெல்லாம் தெரியும். அவன் பிசாசு. அவன் என்னென்னவோ வழிகளையெல்லாம் கையாண்டு கர்த்தருடைய பணிகளுக்கு எதிரான காரியங்களை எப்போதுமே செய்து வந்திருக்கிறான். புதிய ஏற்பாட்டில் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தல் விசேஷம் எதை விளக்குகிறது? பிசாசுக்கும் ஆண்டவருக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கிற போராட்டத்தை விளக்குகிறது. அதில் நாமும் சம்பந்தப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய திருச்சபையும் அதில் சம்பந்தப்பட்டுள்ளது. ஆகவே எப்பொழுதுமே பிசாசுக்கு கர்த்தருடைய காரியங்கள் பிடிக்காது. அதைக் குழப்புவதற்காகவும், பிரச்சனைகளைக் கொண்டு வருவதற்காகவும், அழிப்பதற்காகவுமான முயற்சிகளில் அவன் ஈடுபட்டு வருகிறான்.

ஆண்டவர் இந்த உலகத்தில் இருந்தபொழுது அவரையும் அழிப்பதற்கு பிசாசு முயற்சி செய்தான். ஆனால் அவனால் முடியவில்லை. ஆண்டவர் வந்த காரியத்தைப் பூரணமாக நிறைவேற்றிவிட்டுப் பரலோகம் போய்விட்டார். இப்போது பிசாசினுடைய கண்ணோட்டம் எங்கு திரும்பியிருக்கிறது? கர்த்தருடைய திருச்சபையை நோக்கித் திரும்பியுள்ளது. திருச்சபையைக் குழப்புவதற்காகவும், இல்லாமல் ஆக்குவதற்காகவும் அவன் பல காரியங்களைச் செய்து வருகிறான். சில வருடங்களுக்கு முன் கோவிட் வந்தபோது உலகமே அதிர்ந்து போய்விட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அப்போது என்ன செய்வதென்று தெரியாதிருந்தோம். அந்த கோவிட் எத்தனை காலங்கள் நீடிக்கும் என்று எவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

அன்று திருச்சபைக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டது. பல நாடுகளில் திருச்சபைகள் கூடி வருவதற்குப் பெருந்தடை ஏற்பட்டது. அரசாங்கத்தின் பேச்சைக் கேட்க வேண்டுமா அல்லது கேட்கக்கூடாதா என்ற பிரச்சனைகள் சில நாடுகளில் இருந்ததை நாம் கவனித்தோம். சில மாதங்கள் கூட சபைகள் கூடிவர முடியாத நிலை இருந்தது. அவ்வேளையில் யார் மிகவும் அதிகமாக சந்தோஷப்பட்டிருப்பான் என்று நினைக்கிறீர்கள்? பிசாசுதான். என் சபையில் கூட இப்படி எல்லாம் நடக்கப்போகிறது என்கிற ஒரு அனுமானத்தினால் சபை மக்களை நான் எச்சரித்திருந்தேன். இம் மாதிரியான இக்கட்டான சூழ்நிலை வருகிறபோது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், திருச்சபை கூடி

வர முடியாத ஒரு சூழ்நிலையில் ஞானத்தோடு நடந்து நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் சொல்லி எச்சரித்திருந்தேன். கோவிட் நீடித்து முடிவடைந்தபோது உலகத்தில் பல சபைகள் இல்லாமல் போய்விட்டன. அந்தச் சபைகள் மறுபடியும் கூடி வரவில்லை. எங்கள் சபைக்குக் கூட சிலர் வந்தார்கள். நான் அவர்களிடம் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டபோது கோவிடோடு எங்கள் சபை இல்லாமல் போய்விட்டது என்றனர்.

கோவிட் ஒரு விதத்தில் என்ன செய்திருக்கிறது? உண்மையாக ஆண்டவருடைய பிள்ளைகளாக இல்லாமல், சுயநலத்திற்காக சபைக்குப் போய் வந்திருந்தவர்களுக்கு கோவிட் ஆபத்தாக முடிந்திருக்கிறது. வீட்டிலிருந்து பழகிப்போனவர்களுக்கு திரும்பவும் சபைக்குப் போக இருதயம் இருக்கவில்லை. கோவிட் காலத்தில் நாம் எப்படியாவது ஆவிக்குரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக சில தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டோம். நான் கோவிட் நேரத்தில்தான் வழக்கத்திற்கு அதிகமாக உழைத்திருந்தேன். இன்டர்நெட் மூலமாக அநேக செய்திகளை வழங்கியிருக்கிறேன். அப்போதுகூட நான், இதைத் தற்காலிகமாகத்தான் செய்கிறோம், இதையே நாம் நிரந்தரமானதாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று எச்சரித்திருக்கிறேன்.

சபை மீண்டும் கூடிவருகிறவரையும் ஒருவரை ஒருவர் ஊக்குவிப்பதற்காகவும், ஆறுதல் சொல்லுவதற்காகவும், ஆண்டவருடைய வேதத்தை படிப்பதற்காகவும் இன்டர்நெட்டில் கூடி வந்திருக்கிறோமே தவிர கோவிட் முடிந்த பிறகு இது வழமையான கூட்டங்களாகத் தொடரக்கூடாது என்று சொல்லியிருந்தேன். அதேவிதமாக கோவிட் முடிந்த பிறகு அதை நிறுத்தியும் விட்டோம். இப்போது கோவிட் முடிந்த பிறகும் அநேகர் இணைய தளத்திலேயே தங்கியிருக்க ஆரம்பித்து விட்டார்கள். கோவிட் வந்த பிறகுதான் எனக்கு சூம் (Zoom) என்ற ஒன்று இருந்ததே தெரியவந்தது. அதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டோம். இப்போதும் அதை நான் பயன்படுத்தினாலும் திருச்சபைக்குரிய வழமையாக சபைகூடிவந்து செய்யவேண்டிய காரியங்களுக்காக அதைப் பயன்படுத்துவதில்லை. எங்களுடைய சபையில் சபை கூடி வருதல்தான் தொடருகிறது; சூம் ஆராதனை செய்வதில்லை.

கோவிட் காலத்தைப்போல பிரச்சனையுள்ள காலங்கள் வருகிற போதுதான் எத்தனை பேருக்கு உண்மையிலேயே வேதத்தில் நம்பிக்கை இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். உண்மையிலேயே வேதத்தை விசுவாசித்து அது தேவனுடைய வார்த்தை, அந்த வார்த்தையில் தவறு இருக்காது, அது எக்காலத்துக்கும் நிலைத்திருக்கிற வார்த்தை, அவருடைய ஞானம் நம்முடையதைவிட மேலான ஞானம் என்பதால் அந்த வார்த்தையில் சொல்லப்படுகிற காரியங்களும் நிலைத்திருக்கும்

என்கிற நம்பிக்கை எத்தனை பேருக்கு இருக்குமென்பதை பிரச்சனைகள் தான் வெளியே கொண்டு வந்து காட்டும். ஒருவரிடத்திலோ அல்லது ஒரு சபையிலோ பிரச்சனை ஏற்பட்டால் உண்மையிலேயே அங்கு என்ன இருக்கிறது என்பதைத்தான் அது வெளிக்காட்டிவிடும். பிரச்சனை ஒருபோதும் புதிதாக ஒன்றையும் ஆரம்பித்து வைக்காது. ஒருவர் ஆத்மீக நிலையில் எப்படி இருக்கிறார் என்பதையே அது வெளிப்படுத்தும். ஏனென்றால் வேதத்தை ஆராய்ந்து படித்து வாழ்கிற கிறிஸ்தவனுக்கு பிரச்சனை என்பது பிரச்சனையாக இருக்காது.

கிறிஸ்தவ வாழ்க்கையே பிரச்சனை உள்ள வாழ்க்கைதான். ஒரு கிறிஸ்தவன் இந்த உலகத்தில் பிரச்சனைகளையும் தொல்லைகளையும் தவிர்க்க முடியுமா? முடியாது. ஆண்டவர் தன்னுடைய காரியங்களை நிறைவேற்றுவதற்காக இந்த உலகத்துக்கு வந்தபோது பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையை அவர் வாழவில்லையே. அவர்கூட இருந்தவர்கள்கூட அவருக்குப் பிரச்சனை தந்தார்கள். அவருடைய சீடர்களே அவருக்குத் தலைவலியாக இருந்தார்கள். ஆண்டவர் அதையும் பொறுமையோடு தாங்கித் தான் செய்ய வந்த காரியங்களை செய்து முடித்தார். பிரச்சனையைப் பயன்படுத்தி ஆண்டவரையே விட்டுவிட்டுப் போகிறவன், வேதத்தை மாற்றி அமைக்கப் பார்க்கிறவன் மனிதனாகவே இருக்க முடியாது. அது கிறிஸ்தவன் செய்கிற காரியம் அல்ல. ஆகவே பிரச்சனை ஒருவன் எத்தகைய ஆத்மீக நிலையில் இருக்கிறான் என்பதையே சுட்டும். கோவிடுக்குப் பிறகு அதுவரையும் சபைக்குப் போய்க்கொண்டிருந்த அநேகர் இணையதளத்திலும், சமூக வலைதளங்களிலும் தஞ்சமடைய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களில் ஒரு கூட்டத்தார் இணையந்தான் எனக்கு சபை என்கிறார்கள், இன்னொரு கூட்டத்தார் வலையொளியில்தான் (YouTube) நான் எல்லா ஊழியங்களையும் பின்பற்றுகிறேன், பிரசங்கங்களையும் இணையத்தில்தான் கேட்கிறேன், ஆகவே எங்களுக்கு உள்ளூர் சபை (Local Church) தேவையில்லை என்கிறார்கள். வேறு சிலர் சமூக வலைதளமே என்னுடைய ஆவிக்குரிய சமுதாயம் என்கிறார்கள். இதையெல்லாம் நாம் கேட்கிறபோது யார் அதில் வெற்றியடைகிறார்கள்? பிசாசுதான். அவன் கோவிடைப் பயன்படுத்தி மனிதர்கள் ஆண்டவருடைய திருச்சபையை நம்பி அதிலிருந்து வாழ்ந்து அவருடைய வார்த்தையைப் பின்பற்றுவதிலிருந்து அவர்களைத் திசை திருப்பிவிட்டிருக்கிறான்.

ஒருமுறை அமெரிக்காவுக்கு போனபொழுது நியூயார்க் மாநிலத்தில் ஒரு பெரிய விளம்பர பலகையைப் பார்த்தேன். அதில் ஆண்டவர் தன்னுடைய சபையைக் கைவிட்டுவிட்டார். இப்போது வானொலியிலேயே அவர் தன் மக்களைப் போஷிக்கிறார். அதனால் இதில் வந்து கலந்துக்கொள்ளுங்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உலகில் கிறிஸ்தவர்களுக்குத் தற்காலத்தில் பெரும் ஆபத்துகள் உருவாகியிருக்கின்றன. போலிகள் நிரம்பி வழிந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் மெய்க்கிறிஸ்தவர்களை

இந்த ஆபத்துக்கள் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. நம்மினத்துக் கிறிஸ்தவர்களில் அநேகர் தங்களுடைய ஆவிக்குரிய தேவைகளை இணையதளத்தில் பெற ஆரம்பித்திருக்கிறார்கள்.

தொழில்நுட்ப வசதிகளை நாம் பயன்படுத்துவதில் தவறேயில்லை. தொழில் நுட்பம் வளராமல் இருக்காது. இன்னும் பத்து வருடங்கள் கழிந்தால் இதுவரையும் நாம் கேள்விப்படாத தொழிநுட்ப வசதிகள் உருவாகியிருக்கும். செயற்கை நுண்ணறிவு (AI) வருமென்று நாம் நினைத்துப் பார்த்தோமா? அதுபோன்ற தொழில்நுட்பங்கள் உருவாகத்தான் செய்யும். அவ்வாறு அது வளருவதைத் தவறாகக் கருதினால் நாம் எந்தத் தொழில்நுட்ப வசதிகளையும் பயன்படுத்தாமல்தான் இருக்க வேண்டும். உலகம் மாறிக்கொண்டே இருக்கும். தொழில்நுட்ப வசதிகளைக் கண்டுபிடிக்கின்ற ஒரு பக்குவத்தை ஆண்டவர் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார், ஆகவே அதெல்லாம் வரத்தான் செய்யும். இருந்த போதும் கிறிஸ்தவன் அவற்றை எவ்வாறு அணுக வேண்டும், என்பதே கேள்வி?

கிறிஸ்தவன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் வேதத்திற்கும் முரண்படாதபடி அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளும் நமக்கு அவசியமில்லை, எல்லாவற்றையும் நாம் பயன்படுத்த வேண்டுமென்றுமில்லை. பயன்படுத்த வேண்டியவைகள் இருக்கின்றன. ஆனால், நம்முடைய வேத நம்பிக்கைகளைக் காத்துக்கொண்டு எதை எங்கு பயன்படுத்த வேண்டுமோ அங்கு கவனத்தோடு பயன்படுத்த வேண்டும். வலையொளியில் எங்களுடைய திருமறைதீபம் என்கிற ஒரு சேனல் இருக்கிறது. அதில் செய்திகளைப் பதிவிட்டிருக்கிறோம். எதற்காக அதைச் செய்திருக்கிறோம்? அதில் வெளிவரும் வேத சத்தியங்களும், பிரசங்கங்களும் நம் நாட்டில் அருகிக் காணப்படுவதால், அத்தகையவற்றை ஆத்துமாக்கள் அடைவதற்காக அதைப் பயன்படுத்திக்கொள்ளுகிறோம். அவற்றைக் கேட்டு ஆத்துமாக்கள் சிந்தித்து, அத்தகைய பிரசங்கங்களையும் போதனைகளையும் அளிக்கும் சபையை அவர்கள் நாடிப் போய் இணைந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே அந்தத் தளம் இருக்கிறது. அதைவிட்டுவிட்டு திருமறைத்தீப வலையொளியை எவரும் உள்ளூர் சபையாக்குவதை நான் அடியோடு எதிர்க்கிறேன். அத்தளத்தின் பயன் குறைவளவானதே. உள்ளூர் திருச்சபை அளிக்கக்கூடியதை அதனால் ஒருபோதும் முழுமையாகத் தரமுடியாது. ஆகவே, கிறிஸ்தவர்கள் அத்தளத்தைப் பயன்படுத்த வேண்டிய விதத்தில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

இப்போது நம் கேள்வி என்னவென்றால், இணையதள சபை (Digital church) என்பதை வேதம் அனுமதிக்கிறதா? வேதத்தில் அதைக் காண முடியுமா? அல்லது வேதம் மக்கள் கூடி வந்து ஆராதிக்கின்ற உள்ளூர்

சபையைப் பற்றிப் பேசுகிறதா? இதைத்தான் இந்த ஆக்கத்தில் சற்று விரிவாகப் பார்க்கப் போகிறோம்.

ஆகவே இதில் மூன்று காரியங்கள் உங்களுக்கு விவரித்துக் காட்டப்போகிறேன்.

முதலாவதாக, கர்த்தர் கட்டி வருவது உள்ளூர் திருச்சபை.

இரண்டாவது, இணையதளம் ஒரு கருவி மட்டுமே, ஆனால் சபை அப்படிப்பட்டது அல்ல.

மூன்றாவது, ஒரு கிறிஸ்தவன் இணைந்துகொள்ள வேண்டியதும், வேதத்துக்கு அடிபணிந்து, சபைத் தலைவர்களுக்கு அடிபணிந்து வாழ வேண்டியதும் உள்ளூர் திருச்சபையில் மட்டுமே.

இந்த மூன்றையும் நாம் வேதத்திலிருந்து ஆராய்வோம்.

## முதலாவதாக, கர்த்தர் கட்டி வரும் உள்ளூர் திருச்சபை

கர்த்தர் தன் உள்ளூர் திருச்சபையைக் கட்டிவருகிறார், இணையத் திருச்சபையை அல்ல. மத்தேயு 16:18ல், இயேசு கூறியிருக்கிறார்,

> "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."

இதை எழுதியது யார்? பரிசுத்த ஆவியானவர். இதைச் சொன்னது யார்? இயேசு கிறிஸ்து. திரித்துவத்தின் மூன்றாவது ஆள்தத்துவம் பரிசுத்த ஆவியானவர், அவர் கடவுள், கர்த்தர். அவர் ஏன் அந்த இடத்தில், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தும், இயேசு சொன்னதாக நான் இணைய சபையைக் கட்டுகிறேன் ஏன் சொல்லவில்லை? நான் என்னுடைய சபையைக் கட்டுகிறேன் என்று சொல்லுகிறார்.

சபைக்கு கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தை எக்லேசியா என்பதாகும். அதற்கு அர்த்தம் கூடி வருகின்ற ஒரு கூட்டம் என்பதே. கூடி வருகின்ற ஒரு கூட்டமென்று சொல்லுகிறபோது அது ஆவிரூபமான ஒரு கூட்டமல்ல, இரத்தமும் தசையுமிருந்து சரீரபூர்வமாக ஆவியோடு கூடி வருகின்ற ஒரு கூட்டமாகும். அங்கு ஒருவரை ஒருவர் பார்க்க முடியும், ஒருவரோடு ஒருவர் பேச முடியும், ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொள்ள முடியும். அதைத்தான் ஆண்டவர் கட்டுவதாகச் சொல்லுகிறார். கண்ணுக்குத் தெரியாத ஒன்றைக் கட்டுவதாக ஆண்டவர் சொல்லவே இல்லை. ஆகவே இயேசு கிறிஸ்து நான் இணையதள சபையைக் கட்டுகிறேன் என்று ஒரு இடத்திலும் சொல்லவில்லை. கூடிவருகின்ற மக்கள் கூட்டத்தை வைத்து என்னுடைய திருச்சபையைக்

கட்டுவேன் என்றுதான் சொன்னார். அந்தத் திருச்சபை கண்ணால் காணக்கூடியதாகதான் எப்போதும் இருக்கும், கண்ணால் காண முடியாத ஒரு சபை என்ற ஒன்றை வேதத்தில் காணவே முடியாது. இறந்து போய் பரலோகத்தில் ஆவிரூபமாக இருக்கின்ற விசுவாசிகள் இருக்கிறார்கள். ஆனால் அது கண்ணால் காண முடியாத சபையல்ல. சபை என்று சொன்னால் அது உலகத்தில் எப்பொழுதும் எந்த இடத்திலேயும் மனிதர்களைக் கொண்டு கூடி வருவதாகத்தான் இருக்கும். அதுதான் சபைக்கு வேதம் கொடுக்கிற விளக்கம்.

ஜோன் கல்வின் என்ற சீர்திருத்தவாதி சொல்லியிருக்கிறார்,

> "எங்கெல்லாம் வேத வார்த்தைகள் உண்மையோடு பிரசங்கிக்கப் படுகிறதோ, நாம் காதால் கேட்க முடிகிறதோ, எங்கெல்லாம் தேவனுடைய திருநியமங்கள் அனுசரிக்கப்படுகிறதோ அங்கு சபை இருக்கிறது."

அப்படியானால் கல்வினுடைய வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன? ஆத்துமாக்கள் திருச்சபையாகக் கூடி வருகிறார்கள், போதகர்களுக்குக் கீழாக இருந்து அவருடைய பிரசங்கங்களைக் கேட்கிறார்கள், அவர்களுடைய கண்காணிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள். சரீரபூர்வமாக ஒரே இடத்தில் கூடி திருவிருந்தை அனுசரிக்கிறார்கள். ஒருவரை ஒருவர் ஏற்று தேவைகளை நிறைவேற்றுகிறார்கள். ஒருவரோடொருவர் ஐக்கியத்தை அனுபவிக்கிறார்கள். அதுதான் உள்ளூர் திருச்சபை.

அப்போஸ்தல நடபடிகளில் 2:42–47வரை நீங்கள் வாசித்துப் பார்த்தீர்களானால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உள்ளூர் திருச்சபை எவ்வாறு உருவானது என்பதை அறிந்துகொள்ள முடியும். பெந்தகோஸ்தே நாளில் பேதுருவினுடைய பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் ஏற்கனவே இருந்த 120 விசுவாசிகளோடு இணைந்து திருச்சபை முதன்முறையாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அமைக்கப்பட்டது. அது கண்ணால் காணக்கூடிய சபையாக இருந்தது. அப்போது அந்தத் திருச்சபை அமைக்கப்பட்டு, அது கூடிவந்தபோது ஆத்துமாக்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் தொடர்ச்சியாக விடாப்பிடியாக நான்கு காரியங்களுக்கு வாழ்க்கையில் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அந்த நான்கு காரியங்களும் எதைக் காட்டுகின்றனவென்றால் திருச்சபையினுடைய பிரித்துவிட முடியாதபடி, எடுத்துவிட முடியாதபடி, நிராகரிக்க முடியாதபடி காணப்படவேண்டிய அம்சங்களைக் காட்டுகின்றன. இந்த அம்சங்கள் இல்லாதவைகளுக்குப் பெயர் சபை அல்ல. இந்த அம்சங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து விடாப்பிடியாக அவற்றைப் பின்பற்றாதவர்கள் கிறிஸ்தவர்களாகவும் இருக்கமுடியாது. இவற்றிற்கு மாற்றாக (Substitute) வேறெதையும் அதில் திணிக்க முடியாது. இது ஆண்டவருடைய வார்த்தை, ஆவியானவர் எழுதி வைத்திருக்கின்ற வார்த்தை. அதை நாம் விசுவாசிக்க வேண்டும், பின்பற்ற வேண்டும்.

***திருச்சபையில் காணப்படும் நான்கு காரியங்கள் யாவை?***

*முதலாவதாக, அப்போஸ்தலர்களுடைய போதனைக்கு ஆத்துமாக்கள் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.* அப்போஸ்தலர்களுடைய போதனை என்றால் என்ன அர்த்தம்? இன்று அப்போஸ்தலர்கள் இல்லை. அப்படியானால் அப்போஸ்தலர்களுடைய போதனை என்பது எது? அன்று அப்போஸ்தலர்கள் சபைகளில் பிரசங்கம் செய்து அவர்களுக்குப் போதனையும் அளித்திருந்தார்கள். இன்று சபைகளில் அவற்றைச் செய்யப் போதகர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்று சபைகளில் போதகர்களுடைய பிரசங்கங்களுக்கும், போதனைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் ஆத்துமாக்கள் தங்களை ஒப்புக்கொடுத்து தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்தார்கள். ஆண்டவரை நம்புகிற ஒருவன், சபைக்கு மதிப்பு கொடுக்கிறவன் இதையே செய்வான். அவர்கள் அப்போஸ்தலர்களுடைய போதனைகளுக்குத் தொடர்ச்சியாகத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அன்று இந்த ஆதி கிறிஸ்தவர்கள் ஒரு ஞாயிறுவிட்டு இன்னொரு ஞாயிறு தங்களைச் சபைக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. தங்களுடைய வசதிக்கேற்றபடி தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி அதைச் செய்யவில்லை. அவர்கள் தொடர்ச்சியாக, விடாப்பிடியாகத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தார்கள்.

*இரண்டாவதாக, அவர்கள் ஐக்கியத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.* இன்டர்நெட்டில் என்ன ஐக்கியம் இருக்க முடியும்? நான் வேறுநாட்டில் இருப்பதனால் இறையியல் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதற்காக 26 பேரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு சூமில் வகுப்புகளை எடுத்து வருகிறேன். அந்த 26 பேரையும் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் எந்தெந்த சபைக்குப் போகிறார்கள் என்பது தெரியும். தெரியாதவர்கள் யாரையுமே அதில் நான் அனுமதிப்பதில்லை. அதில் கலந்துகொள்ள சிலர் என்னை அணுகியிருக்கிறார்கள், அவர்களிடம் நான், உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன், ஆனால், உங்களை எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டேன். அவர்கள் என்ன செய்கிறார்கள், சபை வாழ்க்கைக்கு எப்படித் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் என்பது எதுவும் எனக்குத் தெரியாது. அவர்கள் என்னோடு தொடர்புகொண்டு பேசுவதாலேயே அவர்களை நான் நம்பவேண்டுமென்ற அவசியமில்லை. நான் தெரிந்தெடுத்த அத்தனைபேரும் எனக்குத் தெரிந்தவர்களாகவும், உள்ளூர் சபையில் தங்களை இணைத்துக்கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். ஏதாவது பிரச்சனையென்றால் அவர்களுக்கு போதகர்கள் இருக்கிறார்கள், அவர்களைத் தொடர்புகொண்டு பேச முடியும். நான் இந்தியா வருகிற நேரம் அவர்களை நேரிலும் சந்தித்துப் பேசிப் பழகமுடிகிறது. முகம் தெரியாதவர்களோடு எப்படி ஐக்கியம் இருக்க முடியும்? ஆகவே நாம் ஒருசில விஷயங்களுக்காக இணையத்தைப் பயன்படுத்தினாலும் அதைக்

கவனத்தோடு ஆண்டவருடைய வேத விளக்கங்களுக்கு முரண்படாத விதத்திலும், உள்ளூர் சபைக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்திலும் பயன்படுத்த வேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு என்னை ஒருவர் தொடர்புகொண்டு வேறொரு இணையதளத்தைப் பார்த்து பாஸ்டர் இந்த இணையதளத்தில் உங்கள் திருமறைத்தீபத்தையும் போட்டிருக்கிறார்கள், 1689 விசுவாச அறிக்கையும் போட்டிருக்கிறார்கள் அவர்களை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார். எனக்கு அவர்களை நன்றாகத் தெரியும், ஆனால் அவர்கள் 1689ஐ முறையாகப் பின்பற்றுவதில்லை, அவர்களோடு எனக்குக் கோட்பாட்டு முரண்பாடுகளும் இருக்கின்றன. அவர்கள் பின்பற்றும் காரியங்கள் என்னைத் தொடர்புகொண்ட நபருக்குத் தெரியாது. ஆனால், வெறும் இணையத்தைப் பார்த்துவிட்டு அதிலிருப்பதை நம்புகிறார். யாரென்று தெரியாத ஒருவரை, கண்ணால் பார்த்து நேரடியாகத் தொடர்பில்லாத ஒருவரை நீங்கள் ஏன் நம்ப வேண்டும்? இணையத்தில் ஆவிக்குரிய விஷயங்களில் மனிதர்களை நம்ப ஆரம்பித்தால் கட்டாயம் மாட்டிக்கொண்டு முழிக்கத்தான் வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் ஒருவர் 20 வருஷத்துக்கு முன்பு ஒரு பெரிய இணையதளத்தை வைத்திருந்தார். நானும் பார்த்துப் பிரமாண்டமாக இருக்கிறதே, இறையியல் கல்லூரி, அது இது என்று என்னென்னவோ செய்கிறாரே என்று அறிந்து அங்கிருக்கும் எனது நண்பரான போதகர் ஒருவரைத் தொடர்புகொண்டு அந்த நபரை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டேன். அவரும், நன்றாகத் தெரியும், அதைச் செய்பவனுக்கு வீடும் கிடையாது, சபையும் கிடையாது, இன்னொருவருடைய வீட்டுக்குப் பின்புறத்தில் இருக்கும் ஒரு டிரெய்லர் லாரியில்தான் அவர் குடியிருக்கிறார் என்று சொன்னார். இணையம் ஏமாற்றுகிறதா இல்லையா? தன்னைப் பற்றிய எந்த விஷயத்தையும் எவருமே அறிந்துகொள்ள இடங்கொடுக்காமல் இணையத்தில் சுலபமாக எவரையும் ஏமாற்றி எதையும் செய்யலாம் அல்லவா? ஆகவே அதைப் பார்த்து ஏமாறலாமா? ஏமாறக்கூடாது. ஏமாறும் இருதயமுடையவர்களே ஏமாந்து அத்தகையோரின் வலையில் விழுந்துவிடுவார்கள்.

**மூன்றாவதாக, அப்பம் பிட்குதலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.** அப்பம் பிட்குதல் என்பது திருவிருந்தைக் குறிக்கிறது. அதை அவர்கள் வேதபூர்வமாகக் கூடிவந்து சபையாகச் செய்தார்கள்.

**நான்காவதாக, திருச்சபை கூடிவந்து ஜெபிக்கும் கூட்டங்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தார்கள்.** இதையெல்லாம் இணையத்தில் செய்யமுடியுமா? முடியாது. ஏன்? திருச்சபையில் போதகர்கள் ஆராய்ந்து தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய உள்ளூர் சபை மக்களுக்கு மத்தியில் குடும்பத்தோடு

வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய செய்கைகளை எல்லாம் ஆத்துமாக்கள் அவதானிக்ககூடியதாக இருக்கின்றன. அவர்களுடைய போதனைகளைத்தான் உள்ளூர் சபை மக்கள் கேட்கவேண்டும். யாரென்றே தெரியாத அனாமத்துக்களின் பிரசங்கங்களைக் கேட்கக்கூடாது. வேதம் அவர்களுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டுமென்று எங்கேயும் கட்டளையிடவில்லை.

இணையத்தில் ஊழியம் செய்கிறேன் என்கிறவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கூட நமக்குத் தெரியாதே. திருச்சபைகூட இல்லாத ஒருவனின் வாழ்க்கை அலங்கோலமாக இருக்கலாம், நமக்கு அது தெரியுமா? தெரியாது. சபையில் இருக்கின்ற போதகர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நாம் கண்ணால் பார்க்கிறோமா இல்லையா? குடும்பத்தோடு அவர்கள் சபைக்கு வருவார்கள், பிள்ளைகளை எப்படி வளர்கிறார்கள், மனைவியோடு எப்படி வாழுகிறார்கள், பிரசங்கம் செய்யும் நேரத்தைத் தவிர்த்த மற்ற நேரங்களில் அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன, மக்களோடு எப்படிப் பேசுகிறார்கள், எவ்வாறு அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கிறார்கள் என்று அனைத்தையும் நாம் பார்க்கிறோம் அல்லவா? இதையெல்லாம் எப்படி இணையத்திலும், வலையொளியிலும் பார்க்க முடியும்? இணையத்தில் நன்மையானவையும் இருந்தாலும் அதில் எத்தனை ஆபத்து இருக்கின்றதென்று தெரிகிறதா? அதனால்தான் ஆண்டவர், போதகர்களாக வருகிறவர்களுக்கான தகுதிகளெல்லாம் ஆராய்ந்து நியமிக்கப்பட்டிருக்கின்ற உள்ளூர் சபைப் போதகருடைய போதனை களுக்குதான் நம் காதையும் இருதயத்தையும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறாரே தவிர, வெறுமனே ஊழியம் செய்யவேண்டும் என்ற ஆர்வக்கோளாறால் தன்னைப் பாஸ்டர் என்று அழைத்துக் கொள்ளக்கூடியவர்களின் பேச்சையெல்லாம் நாம் கேட்கக்கூடாது என்று சொல்லுகிறார்.

இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற நான்கு காரியங்களையும் இணையத்திலோ, சமூக வலைதளங்களிலோ செய்யமுடியாது. அவற்றைச் செய்வதற்கு சபை இருக்கவேண்டும். இணையத்தில் ஐக்கியத்தை எப்படி அனுபவிப்பது? ஐக்கியம் என்றால் என்ன தெரியுமா? அது சதையும் இரத்தமுமாக சரீரம் இருந்து, கண்ணால் பார்க்கக்கூடிய வகையில் அருகில் இருக்கும் ஆவிக்குரிய அனுபவத்தை ஆண்டவரிடமிருந்து அடைந்தவர்களோடு, ஒரேவிதமான சத்திய நம்பிக்கையைக் கொண்டிருந்து கூடி வந்து அனுபவிப்பதற்குப் பெயர்தான் ஐக்கியமாகும். நாம் ஒருவரையொருவர் நேரில் கண்டு பேசவும் உறவாடவும் முடியாமல் இருந்தால் ஐக்கியம் வளர முடியாது. இணையத்தில் ஆவிக்குரிய ஐக்கியம் என்பதெல்லாம் படு போலித்தனம். ஐக்கியம் இருக்க வேண்டுமென்றால் அங்கு சபை இருக்க வேண்டும். சபை இல்லாத இடத்தில் ஐக்கியம் இருக்க முடியாது.

**இரண்டாவதாக, இணையதளம் ஒரு கருவி மட்டும்தான்; சபை அப்படிப்பட்டதல்ல**

எனக்கு மிகவும் பிடித்ததொரு பியூரிட்டன் குறிப்பு தோமஸ் வொட்சனுடையது. அவர் சொல்கிறார்,

> "சபை இல்லாமல் இருக்கிறவன் தேன் கூடு இல்லாமல் இருக்கிற ஒரு தேனியைப் போன்றவன். ஏனெனில், அந்தத் தேனி தேன்கூடில்லாமல் அங்குமிங்கும் அலைந்து செத்துவிடும்."

அதிக நாளைக்கு அது உயிரோடு இருக்க முடியாது. ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய சபையில் ஒரு அங்கமாக இல்லாமல் இருந்தால் கிறிஸ்தவ விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது என்கிறார் வொட்சன். அதனால்தான் எபிரெயருக்கு எழுதின ஆசிரியர் 10:25வது வசனத்தில்: "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நீங்களும் விட்டுவிடாமல் இருங்கள்" என்று சொல்லுகிறார்.

இணையத்தில் கூடிவருதலைத் தவிர்த்து விடாதீர்கள் என்றா எழுதியிருக்கிறது? அல்லது வலையொளியிலோ (YouTube) அல்லது சமூக வலைதளங்களிலோ கூடிவருதைத் தவிர்த்துவிடாதீர்கள் என்றா எழுதியிருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா? இணையத்தின் பக்கமோ, வலையொளி பக்கமோ, சமூக வலைதளங்களின் பக்கமோ போகாமல், நாம் சபையில் மட்டும் அழகாக வாழ்ந்து பரலோகம் போகமுடியும். ஏனென்றால், ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் தேவையான அனைத்திற்கும் சபையை ஆண்டவர் வைத்திருக்கிறார். அந்தச் சபையில் நம்முடைய விசுவாசத்தின் மூலமாக நம்மை இணைத்திருக்கிறார். ஆகவேதான் சபை கூடி வருதலைத் தவிர்த்துவிடாதே என்று வேதம் சொல்லுகிறது எபிரெயருக்கு எழுதியவர் சிலபேர் சபை கூடி வருதலைத் தவிர்த்துவிட்டதால் அவர்களுக்கு வந்த ஆபத்தைச் சுட்டிக்காட்டுகிறார். எதை ஆண்டவர் ஏற்படுத்தி வைத்திருக்கிறாரோ, எந்த நன்மைகளை நாம் அடைவதற்காக அதைச் செய்துவைத்திருக்கிறாரோ அதை அவர்கள் சுயநல நோக்கத்தினாலும், வேறு காரணங்களுக்காகவும் தவிர்த்ததால் ஒரு மோசமான நிலைக்குப் போய்விட்டார்கள். அவர்கள் நாய் தான் கக்கினதைத் தானே திரும்பவும் சாப்பிடுகிறது போன்ற மோசமான நிலைமைக்கு போய்விட்டார்கள்.

நான் ஞாயிற்றுக்கிழமையில் எங்கும் பிரயாணம் பண்ணுவதில்லை, சொல்லப்போனால் ஞாயிற்றுக்கிழமையில் விமானத்தில் பிரயாணம் பண்ணினால் குறைந்த விலைக்கு டிக்கெட் கொடுப்பார்கள். ஆனால் நான் ஒருநாளும் பண்ணினதில்லை. ஏனென்றால் நான் என் சபையில் இருக்க வேண்டும் அல்லது இன்னொரு சபையில் அந்த நாளில் இருக்கவேண்டும். அங்கு நான் பிரசங்கமே பண்ணாவிட்டாலும் நான் சபையில் இருந்து ஆராதித்து ஐக்கியத்தை அனுபவிப்பேன். ஏனென்றால் கர்த்தர் நான் சபையில் இருக்கும்படியாக எதிர்பார்க்கிறார். ஒரு கிறிஸ்தவன் சபை

இல்லாமல் வாழ்ந்தால் என்னவாகும் தெரியுமா? ஒருவாரம் அல்லது இரண்டு வாரம் சபைக்குப் போகாமல் இருந்தால் உங்களுடைய மனம் நன்றாகவா இருக்கிறது? நிச்சயமாக நன்றாக இருக்காது. ஆண்டவருடைய பிரசன்னத்தை அறிய முடியாது. இணையத்தில் ஆண்டவருடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடியுமா? ஆண்டவருடைய பிரசன்னம் எங்கே இருக்கிறது? இரண்டு பேரோ மூன்று பேரோ கூடிவருகிற பொழுது நான் அங்கே இருக்கிறேன் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார் அல்லவா? நீங்கள் சமூக வலைதளங்களை அலசிக் கொண்டிருக்கிறபோது நான் அங்கே இருக்கிறேன் என்றா சொல்லியிருக்கிறார்? அவரைவிட நாம் புத்திசாலிகளா? இரண்டு பேரோ மூன்று பேரோ கூடி வருகிறபோது என்ற வார்த்தைப்பிரயோகம் உள்ளூர்சபையைக் குறிக்கும் வார்த்தைப் பிரயோகம். சபை எங்கு கூடிவருகிறதோ அங்கேயே ஆண்டவருடைய வல்லமையான விசேஷமான பிரசன்னம் இருக்கிறது.

எபிரெயருக்கு எழுதியவர் சபை கூடி வருதலைத் தவிர்த்து விடாதீர்கள் என்று சொன்னதை ஆங்கில வேதத்தில் பார்த்தால் நாம் சரீரபூர்வமாக, உயிருள்ளவர்களாக, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூடியவிதமாக சபைகூடி வருவதை விட்டுவிடாதீர்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு சபை இருக்க வேண்டுமெனில் மனிதர்கள் உயிருள்ளவர்களாக சரீரத்தோடு இருக்கவேண்டும். அந்த இடத்தில் அவர்கள் ஒரு விடாப்பிடியான அர்ப்பணிப்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் ஊக்குவித்து வருகிறவர்களாகவும், அங்குள்ள தலைமைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களாகவும் இருக்க வேண்டும். இதையெல்லாம் இணையதளத்தில் எப்படிச் செய்ய முடியும்?

உடல்நலம் இல்லாமல் ஓய்வுநாளில் சபைக்கு வர முடியாத சபை அங்கத்தவர்கள் வீட்டிலிருந்து கேட்கும்படியாக நேரலை ஒளிப்பரப்பை (Live stream) சிலர் செய்கிறார்கள். அதற்கு எங்கள் சபையில் எல்லாருக்கும் நான் அனுமதி தருவதில்லை. என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை, அவர்கள் சபைக்குப் போவதற்கு மிகவும் ஆர்வமாக இருப்பார், எனினும் அவர் இப்போதைக்கு சபைக்கு வரமுடியாத சூழல் இருப்பதால் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அதில் கலந்துகொள்ளும்படி எல்லோருக்கும் அதன் இணைப்பை அனுப்பமாட்டேன், அதில் கலந்துகொள்ளும்படி சொல்லவும் மாட்டேன். ஏனென்றால் அவர்கள் உள்ளூர் சபையில்தான் இருக்க வேண்டும். சபைக்கு வரமாட்டேன் என்று சொல்பவர்களுக்கு அல்ல இந்த வசதி; வரமுடியாத, பராமரிப்பு அனுமதிக்காத சூழ்நிலையில் இருக்கிறேன் என்று ஆதங்கப்படுகிறவர்களுக்கே இந்த வசதி.

கெவின் டி யாங் என்ற நவீன காலத்துப் போதகரும், சீர்திருத்த இறையியலாளரும் சொல்லுகிறார்: “எபிரெயர் 10:25 வது வசனத்திற்கு

இணையத்தின் மூலமாகவோ, போட்காஸ்ட் மூலமாகவோ அல்லது இணையதளத்தில் இருக்கும் செய்திகளைப் பதிவிறக்கம் செய்து கேட்பதன் மூலமாகவோ நாம் அடிபணிய முடியாது. கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடி வரவேண்டும். அதை நீங்கள் தவிர்க்காதீர்கள்". 1 தீமோத்தேயு 3:15 வது வசனத்தில் பவுல் எழுதுகிறார்,

> "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது."

இங்கு தேவனுடைய வீடு என்பது திருச்சபையைக் குறிக்கிறது. பவுல் அப்போஸ்தலன் பலமுறை சிறையில் இருந்திருக்கிறார், அதனால் அவர் நினைத்தபடி திட்டமிட்ட இடங்களுக்குப் போகமுடியவில்லை. அப்படி அவர் போவதற்குத் தாமதமாக இருப்பதால் தேவனுடைய வீடாகிய அந்த சபையிலே தீமோத்தேயு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இங்கே விளக்குகிறார். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது என்று சொல்லும்போது இணையத்தைப் பற்றியோ, சமூக வலைதளங்களைப் பற்றியோ இங்கு அவர் குறிப்பிடவில்லை. சபைக்கு பெயர்தான் தேவனுடைய வீடு, இணையம் அல்ல. இணையம் வெறும் கருவி மட்டும்தான், அதற்கு ஜீவனும் இல்லை. அதில் நாம் ஐக்கியமாகவும் வர முடியாது. உள்ளூர் சபைதான் சத்தியத்திற்குத் தூணாகவும் ஆதாரமாகவும் இருக்கிறதே தவிர சமூக வலைதளங்கள் அல்ல. நம் திருமறைத்தீபத்திற்கு ஒரு வலைதளம் இருக்கிறது. சத்தியங்கள் பல இடங்களுக்குப் போவதற்காகவும், வாசிப்பதற்காகவும் அதில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அது பத்திரிக்கையை வாசிப்பதற்காக மட்டும்தான், அதை வைத்து திருமறைத்தீபம் சபை என்று நான் எதையும் ஆரம்பிக்கவில்லையே. ஒரு நூலைப் படிப்பதற்கு எந்தவிதத்தில் அது பயன்பட முடியுமோ அதற்குரிய காரியங்களைத்தான் அதில் தந்திருக்கிறோமே தவிர அதன் மூலமாக திருச்சபை நடத்துகிற காரியத்தை நாம் செய்வதில்லை. திருச்சபையால் நிறைவேறக்கூடிய அநேக காரியங்கள் அதன் மூலமாக நிறைவேற முடியாது.

தேவனுடைய சபைதான் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இருக்கிறது, அதற்கு மாற்றாக (substitute) ஆண்டவர் வேறொன்றையும் ஏற்படுத்தவில்லை. சர்க்கரை வியாதி இருக்கிறவர்களுக்கு சர்க்கரை இல்லாமல் இருக்கும் இனிப்புகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்றைக்கு இனிப்பு இல்லாத லட்டு கடைகளில் கிடைக்கிறது. சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு அது மிகவும் பயன்படும். அது ஒரு மாற்று தானே? இனிப்பு லட்டு வேண்டாமென்றால் இனிப்பில்லாத லட்டு

கிடைக்கிறது, அது பரவாயில்லை. ஆனால் ஆண்டவர் சபைக்கு மாற்றாக வேறொன்றையும் ஏற்படுத்தவில்லை. அவரது இரண்டாவது வருகை வரையும் இன்னொன்று வரப் போவதுமில்லை, அத்தகைய ஒன்றை அவர் அனுமதிக்கப் போவதுமில்லை.

இன்னொன்றையும் நன்றாக யோசித்துப் பாருங்கள், நாம் எல்லாரும் பூரணமானவர்கள் அல்ல, ஒழுங்கான ஒரு உள்ளூர் சபையாக இருந்தாலும் கூட சில நேரம் ஒரு சிலர் முடக்குப் பண்ணுவோமா இல்லையா? அவ்வாறு செய்கிற நேரம் போதகர்கள் நம்மோடு வந்து பேச வேண்டிய சூழல் இருக்கிறது இல்லையா? அவர்கள் பேசி ஆலோசனை கொடுக்க வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. ஆனால், சிலபேருக்கு அந்த ஆலோசனைகளைக் கொடுத்தாலும்கூட பெருமையின் காரணமாக உடனே ஏற்றுக்கொள்ளுகிற இருதயம் இருக்காது. அப்போது அவர்களைக் கண்டிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அதற்கும் மேலாக முரண்டு பண்ணுகிறவர்களாக இருந்தால் அவர்களைத் திருத்தும்படியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதை ஆண்டவரே தன் சபையில் ஏற்படுத்தியிருக்கிறார். அதைத்தான் பவுல் கொரிந்து சபையில் செய்தார். இணையத்திலோ, சமூக வலைதளத்திலோ இதைச் செய்யமுடியுமா? முடியாது. ஆண்டவருடைய வேதம் ஒழுங்கு நடவடிக்கை சபையில் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறது; இணையத்தில் அல்ல. சபை இல்லாவிட்டால் எப்படி திருத்து நடவடிக்கை கொண்டு வரமுடியும்? இணையதளத்தில் ஒருவரை எப்படித் திருத்த முடியும்? அதில் எப்படிப் போதக ஊழியம் செய்யமுடியும்? ஆண்டவர் யாரை ஆளுகிறார்? தனது ஆடுகளாகிய ஆத்துமாக்களை ஆளுகிறார். எங்கேயோ சிதறிப்போயிருக்கும் ஒரு இணையக் கூட்டத்தை அவர் ஆளவில்லை. அவர் தன் சபையை ஆளுகிறார். அவர்களை ஆளுவதற்கு சபைப் போதகர்களை ஆண்டவர் கொடுத்திருக்கிறார்.

**மூன்றாவதாக ஒரு கிறிஸ்தவன் தான் இணைந்து கொள்ள வேண்டியது, வேதத்திற்கும், சபைத் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்து வாழ வேண்டியது உள்ளூர் திருச்சபையில் மட்டுமே**

அடுத்ததாக, உள்ளூர் திருச்சபை ஏன் அந்தளவுக்கு அவசியமானது? அது இருக்க வேண்டிய இடத்தில் இன்னொன்று ஏன் இருக்க முடியாது என்பதைச் சிந்திப்போம். மத்தேயு 28:19 வது வசனத்தில் தேவன் ஏற்படுத்தியிருக்கிற திருநியமங்களை உள்ளூர் திருச்சபை மட்டுமே நடைமுறையில் வைத்திருக்க முடியும். ஞானஸ்நானம் யாருக்குக் கொடுக்க வேண்டும்? ஒருவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க யாருக்கு அதிகாரம் இருக்கிறது? திருச்சபைக்குத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் திருச்சபைத் தலைவர்கள் மூலமாகத்தான் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும். அப்படி ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஒருவர் தயாராக இருந்தால், அவர்

திருச்சபை அங்கத்துவத்திற்கும் தயாராக இருக்கவேண்டும். ஆகவே திருச்சபை இல்லாத இடத்தில் ஞானஸ்நானம் இருக்க முடியாது.

*மத்தேயு 28:18–20*

*"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."*

சுவிசேஷத்தை பிரசங்கித்து, அந்தச் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்களுக்கு பிதா குமாரன் ஆவியானவருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து நான் போதித்த எல்லாவற்றையும் அவர்கள் பின்பற்றும்படியாக போதிக்க வேண்டுமென்று சொன்னால், அதை எப்படி நிறைவேற்றுவது? சபையை வைத்துதான் அதைச் செய்யமுடியும். ஏனென்றால் அப்போஸ்தலர்கள் அந்தப் பிரதான கட்டளையை இயேசுவிடம் பெற்றுக்கொண்டு என்ன செய்தார்கள்? பெந்தகொஸ்தே நாளில் சபையை அமைத்தார்கள். ஏன் அவர்கள் சபையை அமைத்தார்கள்? இந்தப் பகுதியில் சொல்லியிருக்கும் காரியங்களையெல்லாம் சபை மட்டும்தான் செய்யமுடியும், வேறு யாரும் வேறெங்கேயும் செய்யமுடியாது.

அடுத்ததாக திருவிருந்தைப் பார்க்கிறபோது, திருவிருந்து கொடுக்க வேண்டுமென்றால் சபை வேண்டும். 1 கொரிந்தியர் 10–11 வரையுள்ள அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள். அதில் அடிக்கடி நீங்கள் கூடி வருகிறபொழுது, நீங்கள் ஓரிடத்தில் கூடி வருகிறபொழுது, நீங்கள் சபையாய் கூடி வருகிறபோது என்று சபை கூடிவருதலைப் பற்றியே பவுல் பேசுகிறார். உள்ளூர் சபை ஓரிடத்தில் கூடி வரவேண்டும், அது ஒரு வாரம் ஒரு இடத்திலேயும், இன்னொரு வாரம் வேறொரு இடத்திலேயும் கூடி வரமுடியாது. சபையாய் கூடி வரவேண்டும், அது வெறும் தான்தோன்றித்தனமான கூட்டமாக அல்லாமல், ஆண்டவருக்கும் ஒருவருக்கொருவரும் தங்களை ஒப்புக்கொடுத்து அமைக்கப்பட்ட சபையாய்க் கூடிவரவேண்டும். இத்தனையையும் வேதம் சுட்டியும், சிலபேர் என்ன செய்வார்கள் என்றால் நம் சபைக்கு வருகிற அம்மா மருத்துவமனையில் இருக்கிறார்கள், ஆகவே அங்கு கொண்டு போய் திருவிருந்தைக் கொடுக்கலாம் என்பார்கள். அது தவறு. மருத்துவமனையில் இருப்பதால் திருவிருந்து எடுக்கவில்லையென்றால்

அது அங்கீகரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அது பராமரிப்பு ஏற்படுத்தியிருக்கின்ற தடை. ஆண்டவருக்கு அது தெரியும்.

ஒருசிலர் சபையாக மருத்துவமனைக்கு சென்று திருவிருந்து கொடுக்கிறார்கள். அதுவும் தவறு. சபை ஒரே இடத்தில் வழமையாக எங்கு கூடி வருகிறதோ அங்கு மட்டும்தான் திருவிருந்து கொடுக்க வேண்டும். அந்த அம்மாவிற்கு திருவிருந்து கொடுக்க வேண்டுமென்றால், கட்டிலோடு அவர்களைச் சபைக்குக் கொண்டுவந்தால் அப்போது கொடுக்கலாம். சபை ஒரு இடத்தில் கூடிவந்து செய்கிற காரியத்தை மாற்றிச் செய்வதற்கு நமக்கு அனுமதி இல்லை. சபை ஒழுங்குகளை மாற்றிச் செய்ய நினைப்பது யெரோபெயாம் சிந்தனை. அவனுக்குத்தான் அவ்விதமான சிந்தனைகள் வந்தன. இன்றைக்கு அவ்விதமான சந்ததி நம் நாட்டில் தொடருகிறது.

சபை கூடி வருதலைத் தவிர்க்காதீர்கள். அப்படித் தவிர்த்தால் ஐக்கியத்தை அனுபவிக்க முடியாது, திருவிருந்தில் பங்கு கொள்ள முடியாது, சபை மக்கள் மேல் உங்களுக்கு அன்பு இருக்க முடியாது, அப்படியென்றால் ஆண்டவர் மேல் உண்மையிலேயே உங்களுக்கு அன்பு இருக்கிறதா என்கிற ஒரு பெரும் கேள்விக்குறியே வந்துவிடும். அதுவும் உள்ளூர் திருச்சபையில் தான், அதன் தலைமையின் கீழ்தான் சபையின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். சபையற்றவர்கள், தோமஸ் வொட்சன் சொல்வதுபோல் தேன்கூடில்லாமல் அலையும் தேனீக்களே; அவை நீண்ட நாட்களுக்கு உயிரோடிருக்காது.

எபிரெயர் 13:17ல் வேதம், “உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர் களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்;” என்று சொல்லுகிறது. உங்களை ஆளுகிறவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள், அடுத்தாக அவர்களுக்கு நீங்கள் அடிபணியுங்கள் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் சபையில் அங்கத்தவர்களாக இருந்தால் அந்த அங்கத்தவ பொறுப்புகளையெல்லாம் விசுவாசத்தோடு கடைபிடிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. உங்களுடைய சபைத் தலைவர்களை ஆண்டவர் உங்களுக்காக, உங்கள் ஆவிக்குரிய நன்மைகளுக்காக கொடுத்திருக்கிறார் என்பதை விசுவாசித்து, அவர்கள் மூலமாக ஆசீர்வாதங்களை அடைய வேண்டியதும் உங்களுடைய பொறுப்பு. ஆகவேதான் உங்களை ஆளுகிறவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள், அடிபணியுங்கள் என்று வசனம் சொல்லுகிறது. அப்படியென்றால் அதற்கு என்ன அர்த்தம்? மாட்டைப் பிடித்துக் கட்டும்போது அது முரண்டு பண்ணும், அதுபோல இல்லாமல் எல்லாவிதத்திலும் நம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவர்களுடைய தலைமைக்கு இடங்கொடுக்க வேண்டும். அதுமட்டும்தான் நமக்கு நன்மை அளிக்கும், அவர்களுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது.

இணையதளத்தில் இருக்கிற ஒரு பிரசங்கிக்கு உங்களைப்பற்றி என்ன தெரியும்? நீங்களாவது அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு எப்படியோ அவர்களுடைய படத்தைப் பார்க்கிறீர்கள். ஆனால் அவருக்கு உங்களைத் தெரியுமா? சபையில் ஒரு போதகர் இருந்தால் உங்களுக்கும் அந்தப் போதகரைத் தெரியும், அந்தப் போதகருக்கும் உங்களைத் தெரியும். அதற்கு இருவழித் தொடர்பு என்று சொல்லுவார்கள். அது இணையதளத்தின் மூலமாக வருமா? அந்த நபரால் உங்களுக்காக ஜெபிக்க முடியுமா? நீங்கள் வாராவாரம் உட்கார்ந்து கேட்டாலும் அவருக்கு உங்களைத் தெரியாது. அவரோடு எப்படி நீங்கள் ஐக்கியத்தில் வர முடியும்? அவர் எப்படி உங்களுக்காக ஜெபம் பண்ண முடியும்? அப்படியானால் அதில் என்ன பிரயோசனம் இருக்கிறது? ஒரு பிரயோசனமும் இல்லை. அவரால் உங்களைத் திருத்து நடவடிக்கைக்கு கொண்டு வர முடியாது. பொறுப்போடு உங்களை நடத்துவதற்கான எதையுமே அந்த மனிதரால் செய்ய முடியாது. அது எத்தனை ஆபத்து தெரியுமா?

பியூரிட்டனான ஜோன் ஓவன் சொல்லியிருக்கிறார்,

> “மூப்பர்கள் இல்லாமல் சபை இருக்கக்கூடாது, சபை இல்லாமல் மூப்பர்கள் இருக்கக்கூடாது”

ஒரு போதகராக இருந்தால் அவருக்கு ஆத்துமாக்கள் இருக்கவேண்டும். எங்கேயாவது ஒரு ஆட்டு இடையனைப் பார்த்தோமானால் நாம் தைரியமாகச் சொல்லலாம், எங்கேயோ பக்கத்தில்தான் ஆடுகள் இருக்கின்றன என்று. ஆட்டு இடையன் என்றாலே அவன் ஆடுகளுக்குத்தான் இடையன். ஆடுகள் இல்லாத இடையனைப் பார்க்க முடியாது. ஆடுகள் இல்லாதவனுக்கு இடையன் என்ற பெயரையும் அளிக்க முடியாது. ஆனால் நம்மினத்தில் சபையே இல்லாதவர்கள்கூட போதகர் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆத்துமாக்களே இல்லாத ஒருவனுக்கு எப்படி மேய்ப்பன் என்ற பெயரைக் கொடுப்பது? ஆடுகள் இருப்பவன்தான் மேய்ப்பனாக இருக்கமுடியும். ஆகவே யூடியூபிற்கு ஒரு சப்ஸ்கிரிப்ஷன் போடுவது தேவனுடைய கூட்டத்தில் இணைந்ததற்கு அர்த்தமாகாது.

மேலும் உள்ளூர் திருச்சபையில்தான் நாம் ஐக்கியத்தில் வருவது மட்டுமல்ல, ஒருவருக்கு ஒருவர் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள முடியும். புதிய ஏற்பாட்டில் ஒருவருக்கு ஒருவர் என்கிற வார்த்தை 50 தடவைக்கு குறையாமல் வந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ண வேண்டும், ஒருவருக்கொருவர் கண்டிக்க வேண்டும், ஒருவருக் கொருவர் ஆறுதல் அளிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் ஊக்குவிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்பதெல்லாம் திருச்சபை கூடி வந்து அந்தத் திருச்சபையில் அங்கத்தவர்கள் செய்யவேண்டிய கடமைகளாகத்தான் வேதத்தில் காட்டப்பட்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்டும், ஆனால், இணையத்தில்

அந்த அன்பை எப்படிக் காட்டுவது? ஒருவருக்கொருவர் என்று சொல்லப் பட்டிருக்கும் ஐம்பது கடமைகளையும் எடுத்துப் பார்த்தால் அவற்றை நிறைவேற்றுவதற்கு நிச்சயம் உள்ளூர் சபை தேவை. இணையதளத்தில் அவற்றைச் செய்யவே முடியாது. ஆகவே இணையதளத்தின் முன் உட்கார்ந்து செய்தியைக் கேட்பதெல்லாம் சபை கூடிவருதல் ஆகாது.

இவ்வாறெல்லாம் விளக்குவதனால், இணையதளத்தால் ஒரு பிரயோஜனமும் இல்லை, அதன் பக்கமே போகக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கே அது பயனுள்ளதாக இருக்கும். சுவிசேஷத்தைப் பரப்ப அதைப் பயன்படுத்தலாம். அதன் மூலம் மட்டுமே அதைச் செய்யலாம் என்று சொல்லவரவில்லை. சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு நேரடியான மனித தொடர்பு தேவை. அவர்கள் நம்மைப் பார்க்க வேண்டும், நாம் அவர்களைப் பார்க்க வேண்டும். அதற்கு மேலாக இணையத் தையும் பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பரப்பலாம். அது மட்டுமே இதற்கான கருவி அல்ல, அதுவும் ஒரு கருவியாகும். அதன் மூலம் நம்முடைய பிரசங்கங்கள் பல இடங்களுக்குப் போய்ச் சேர முடியும். அதனால்தான் வலையொளியில் என் பிரசங்கங்களை நான் பதிவேற்றம் செய்துள்ளேன். அநேகர் அதனால் பயனுமடைகிறார்கள். அவர்கள் என்னைத் தொடர்புகொண்டால் அவர்களுக்குங்கூட நான் சபையைத் தேடி அங்கு போய் இணைந்துகொள்ளுங்கள் என்றுதான் அறிவுரை கூறி வருகிறேன். அதைப் பயன்படுத்தி இறையியல் பயிற்சி வகுப்புகளை எடுக்க முடியும். அதையும் நான் எனக்குத் தெரிந்தவர்கள், அறிமுகமானவர்கள், சபையில் இருப்பவர்களுக்குத்தான் செய்து வருகிறேன். இதையும்விட வியாதியால் பாதிக்கப்பட்டு சபைக்கு வர முடியாமல் இருப்பவர்கள் வீட்டில் இருந்தால் தற்காலிகமாக இணையம் அவர்களுக்கு உதவி செய்யும்.

சீர்த்திருத்த பிரசங்கியான மார்டின் லாய்ட் ஜோன்ஸ் சொல்கிறார், "இன்றைக்கு சபையினுடைய அதிமுக்கியமான தேவை என்னவென்று சொன்னால் உண்மையான வேதப் பிரசங்கந்தான், அதைக் கொடுக்க வேண்டிய இடம் உள்ளூர் சபைதான்." அது உண்மையான வார்த்தைகள். அதற்குமேல் இந்த நவீன தொழில்நுட்பக் கருவிகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் உள்ளூர் சபைக்கு சமமாகவோ, அதற்கு ஈடாகவோ, அதற்குப் பதிலாகவோ வேறு எதையும் கொண்டுவர முடியாது. உள்ளூர் சபையை ஆண்டவர் ஏற்படுத்தி இருப்பது ஒரு முக்கிய நோக்கத்திற்காகத்தான். அந்த அடிப்படை நோக்கங்களை வேறு எதன் மூலமும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது.

அதே நேரம் சமூக வலைதளத்தினால் வருகின்ற ஆபத்துக்களும் இருக்கின்றன. அதில் ஒருவர் பேசுவது பிடிக்கவில்லையென்றால், அன்பு ஒழுகுகின்ற மாதிரி பேசும் நபரைத் தேடிப் போவீர்கள். சபையில் நீங்கள் உட்கார்ந்திருந்தால் அது நடக்காது, கண்டிப்பும் பிரசங்கத்தில் வந்துவிடும். ஆண்டவர் ஒரு இடத்தில் சொல்லி இருக்கிறார்: உன்னுடைய சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றி வா

என்று. சிலுவை என்பது உங்களுடைய பிரச்சனைகள், உங்களுடைய சூழ்நிலைகள், கஷ்டங்களைக் குறிக்கின்றது. அதை எல்லாம் சுமந்து அவரைப் பின்பற்றும்படியாக இயேசு சொல்கிறார். அவர், இணையத்தை சுமந்து என்னைப் பின்பற்றி வா என்று சொல்லவில்லை. உயிரும் சதையும் உள்ள மனிதர்களுக்கு மத்தியில் வாழ்ந்து அவர்கள் மத்தியில் நீங்கள் அனுபவிக்கின்ற அத்தனையையும் சுமந்து என்னை பின்பற்றி வா என்கிறார். இணையதளம் மூலம் இன்னொரு பெரிய ஆபத்தும் இருக்கிறது. ஒருவரை மிகவும் விசுவாசமுள்ளவராக வேத சத்தியத்தில் ஆழமுள்ளவர்களாக அது எவரையும் உருவாக்க முடியாது. ஏனென்றால் அதில் கண்டிப்பும் இல்லை, திருத்துதலும் இல்லை, வழிநடத்துதலும் இல்லை. உங்கள் கையில்தான் பட்டன் இருக்கிறது, எந்தநேரமும் சுவிட்ச் ஆப் செய்து சுவிட்ச் ஆன் பண்ணலாம். ஆகவே அதையே நம்பி இருக்கிறவர்கள் ஆவிக்குரியவிதத்தில் பலவீனமானவர்களாக மட்டுந்தான் இருக்க முடியும். அவர்களுக்கு சபையிலிருந்து கிடைக்கின்ற காரியங்கள் ஒன்றும் இணையத்தின் மூலமாகக் கிடைக்கப் போவதில்லை.

**பயன்பாடுகள்:**

***முதலாவதாக, இன்டர்நெட் சபைக்கு பதிலானது அல்ல. அது சபையை நிராகரிக்கவோ அகற்றி வைக்கவோ முடியாது.***

ஆண்டவர் தன் இரண்டாவது வருகை வரை தொடர்ந்து தன்னுடைய சபையைக் கட்டிக் கொண்டிருக்கிறார். ஆகவே நாம் இயேசு எந்தளவுக்கு தன்னுடைய சபையை நேசிக்கிறாரோ, எபேசியர் ஐந்தாவது அதிகாரத்தில் அது பற்றி விளக்குகிறாரோ, அந்தளவுக்கு அவருடைய சபையிலிருந்து அதை நேசிக்க வேண்டியது நம்முடைய கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கிறது. அப்படியான ஒரு சபையில் நீங்கள் அங்கத்தவராக இருக்கிறீர்களா? இல்லையென்றால் ஏன் இல்லை என்று கேட்டுப் பாருங்கள். ஏன் வேதத்தின் வழிக்கும், ஆண்டவருடைய வழிக்கும் நீங்கள் இன்னும் இடங்கொடாமல் இருந்து வருவதற்குக் காரணம் என்ன? ஆண்டவருக்கு முன் நீங்கள் என்ன பதில் சொல்ல முடியும்? சுயநலம் உங்களை ஆளுகிறதா? உங்களைப் பெருமையும் தன்னலமும் ஆளுகிறதா? வேறென்ன காரணம் இருக்க முடியும்? நாம் என்ன செய்ய வேண்டும்? ஆண்டவருடைய வார்த்தைக்கு நம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் நம்மை ஆளுகிறார் என்று அர்த்தம். அவருடைய வழிக்கு வராமல் இருக்கிறபோது அவருடைய ஆளுகை நம்மேல் இல்லை என்றுதான் பொருள்.

***இரண்டாவதாக, ஒரு சபையில் அங்கத்தவராக இருக்கிறீர்களா? இல்லாதவரை ஆபத்துதான்.***

அதேநேரம், நம்மினத்தில் முறையான சபை அமைப்பையும், அங்கத்துவத்தையும் கொண்டிருந்து விசுவாசத்தோடு நடந்து வரும்

சபைகள் மிகக் குறைவுதான். அதையும் நான் உணருகிறேன். இருந்தாலும் நல்ல சபையைத் தேடி நாடிப் போக வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. ஆண்டவர் உங்களை எதற்கு அழைக்கிறார்? தன்னுடைய மந்தைகள் மத்தியில் இருக்கும் படியாக அழைக்கிறார். ஏன்? அவர் தன்னுடைய மந்தைகளை மேய்க்கிறவராகவும், தன்னுடைய மந்தையை போஷிக்கிறவராகவும் இருக்கிறார். அந்த மந்தைக்கு வெளியில் இருக்கும்போது நாம் எப்படி ஆண்டவரால் போஷிக்கப்பட முடியும்? நீங்கள் மந்தைகளுக்கு மத்தியில் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இணையதளத்தை நீங்கள் எப்போதும் உங்களுக்கு வேலைக்காரனாக மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர, நமக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் உள்ளூர் சபைக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடாது. நமக்கு வேலை செய்யும் கருவியாக அதைப் பயன்படுத்த வேண்டும். கவனத்தோடு நாம் அதை ஆளவேண்டும், அது நம்மை ஆளவிடக்கூடாது. அநேகர் மிகவும் பலவீனமானவர்களாக விழுந்து போய் இணையத்திற்கு அடிமையாக இருப்பதற்குக் காரணமென்ன? அவர்கள் அது தங்களை ஆளும்படியாக அனுமதித்திருப்பதால்தான்.

**மூன்றாவதாக, நீங்கள் சொந்த உள்ளூர் சபை மக்களுக்கு மிகவும் ஆனந்தத்தோடு உங்களை அர்ப்பணிக்க வேண்டும்.**

சபைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து அங்கத்தவர்களாக இருக்கின்ற அந்த மந்தைகளோடு சேர்ந்து நாம் வாழவேண்டும். அங்குதான் நாம் பொறுப்போடு நடந்து கொள்ள முடியும். அவர்களும் பொறுப்புள்ளவர்களாக நமக்கு உதவியாக இருப்பார்கள். அங்குதான் நாம் உண்மையான ஐக்கியத்தையும் அனுபவிக்க முடியும். ஆகவே நாம் சரீரபூர்வமாகவும், தியாகத்தோடும், மந்தைகளுக்கு மத்தியில் உள்ளூர் சபையிலிருந்து ஆண்டவருக்கு சேவை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். அந்தச் சபை உங்களைத் தேடுகிறது. அங்குதான் நீங்கள் இருக்க வேண்டும். அங்குதான் நீங்கள் உங்களுடைய மக்களோடு சேர்ந்து ஜெபம் பண்ண முடியும், உங்களுடைய நேரத்தைக் கொடுத்து உழைக்க முடியும், உண்மையான அன்பைக் காட்ட முடியும், உங்களுடைய ஈவுகளை நீங்கள் பயன்படுத்த முடியும். அதையெல்லாம் சமூக வலைதளத்தில் செய்யமுடியாது. உள்ளூர் சபை மூலமாக மட்டும்தான் இப்போது நான் விளக்கியிருக்கும் காரியங்களைச் செய்ய முடியுமே தவிர, வேறெதனாலும் செய்ய முடியாது.

**நான்காவதாக, இயேசு நேசிக்கின்ற, அவர் பிரசன்னமாக இருக்கின்ற அந்த உள்ளூர் சபையிலிருந்து இயேசுவின் ஆனந்தத்தை அனுபவியுங்கள்.**

ஏனென்றால் அவருடைய பிரசன்னம் அங்குதான் இருக்கிறது. மத்தேயு 18:20ல் "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." என்று வேதம் சொல்லுகிறது. இது

சத்தியமான வார்த்தை. ஒவ்வொரு வாரமும் அவர் சபைக்கு வரத் தவறுவதில்லை. நம்மை சந்திப்பதில் அவருக்கு அளப்பெரிய ஆனந்தம். அதனால்தான் அங்கு பரிசுத்த ஆவியினுடைய செயல்பாட்டை நாம் பார்க்கிறோம், அவருடைய உதவியைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகவே ஆண்டவர் சொன்ன இந்த வாக்குறுதி இணையத்திலிருந்து செய்திகளைப் பதிவிறக்கம் செய்கிறவர்களுக்கும், போட்காஸ்டுக்கும், சமூக வலைதளங்களுக்கும் பொருந்தாது. கண்ணால் காண முடியாமல் இன்டர்நெட்டில் சபை என்ற பெயரில் உலவிக்கொண்டிருக்கிற எந்தக் கூட்டங்களுக்கும் அது பொருந்தாது. சதையும் இரத்தமுமாக மனிதர்களாக ஆணும் பெண்ணுமாக ஆண்டவருக்கு தங்களை அர்ப்பணித்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிற அந்த சபைக்கு மட்டுமே அது பொருந்தும். ஒருவிதத்தில் இணையம் பயனுள்ளதுதான். ஆனால் உள்ளூர் சபை மட்டுமே தேவனுடைய தெய்வீக நிறுவனம். தெய்வீக நிறுவனம் என்று சொல்லுகிற அந்தப் பட்டத்தை வேறு எதற்கும் கொடுக்க முடியாது. அது சபைக்கு மட்டுந்தான் பொருந்தும். இன்டர்நெட் பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால் உள்ளூர் சபை அத்தியாவசியமானது. அது இல்லாமல் நாமிருக்க முடியாது.

**கடைசியாக, இயேசு கிறிஸ்து தன்னுடைய இரத்தத்தை சிலுவையில் பலியிட்டது இணையத்திற்கோ சமூக வலைதளத்துக்கோ அல்ல. உள்ளூர் சபைகளில் சேர்ந்து வாழுகின்ற மக்களுக்காகத்தான் இயேசு தன்னுடைய திருரத்தத்தை சிந்தியிருக்கிறார்.**

ஆகவே ஆண்டவர் ஏற்படுத்தி இருக்கின்ற அந்த உள்ளூர் சபைக்கு விசுவாசமாக இருங்கள். அதில் இணைந்து தேவனுடைய அன்பைப் ருசிபாருங்கள். அங்கு ஐக்கியத்தை அனுபவிக்க பாருங்கள். அதிலிருந்து குடும்பத்தோடு வளரப் பாருங்கள். இணையத்தில் ஒரு குறிப்பிட்ட சில நன்மைகள் மட்டுந்தான் இருக்க முடியும். ஆனால் ஆண்டவருடைய சபையிலிருந்து அனுபவிக்கின்ற நன்மைகளை அதன் மூலமாக அனுபவிக்க முடியாது. அது குறைபாடுகள் கொண்டது. ஆனால் தேவனுடைய சபை இந்த உலகில் பூரணமானதாக இல்லாவிட்டாலும் தேவனுடைய பிரசன்னத்தைக் கொண்டிருக்கும் தெய்வீக நிறுவனம்; அவருடைய வீடு. அது தொடர்ந்து திருந்தி வாழ்ந்து பரலோகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும். அந்த சபைக்கு ஈடானது இணையானது எதுவுமே இல்லை.

**அறிவிப்பு**

வாசகர்களே, திருமறைத்தீபம் தொடர்ந்து தடையின்றி உங்களை வந்தடைய, உங்களுடைய முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், உடனடியாக +91 9445671113 என்ற வாட்ஸ்ஆப் (WhatsApp) எண்ணிற்கு உங்களுடைய புதிய முகவரியைத் தெரிவிக்கவும். பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள். நன்றி.

# இரட்சிப்பின் மகத்துவம்

இரட்சிப்பு பரலோகத்தில் இருந்து வருவது. இந்த உண்மையைத்தான் நிக்கொதேமுவுக்கு இயேசு வெளிப்படுத்தினார். அதனால் இரட்சிப்பு மகத்துவமானது, இந்த உலகத்துக்கு அப்பாற்பட்டது. இருந்தபோதும் இந்த உலகத்து மனிதர்களுக்கே அது தேவைப்படுகிறது. பரலோக அனுபவத்தை இந்த உலகத்தில் கிறிஸ்து மூலம் அடைவதற்குப் பெயரே இரட்சிப்பு.

இந்த ஆக்கத்தில் யோவான் முதலாவது அதிகாரம் வசனங்கள் 11 லிருந்து 14 வரை ஆராயப்போகிறோம். அந்த வசனங்களைக் கவனியுங்கள்.

> யோவான் 1:11–14
>
> "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."

பதினோராவது வசனத்தில் "சொந்தமானதிலே" என்பதை விட அவர் தமக்குச் "சொந்தமானவர்களிடத்தில்" வந்தார் என்றுதான் தமிழில் இருக்க வேண்டும். இந்த அதிகாரத்தில் 1 வசனத்திலிருந்து 14 வசனங்கள்வரைக் கவனித்தால் இந்த நூலிலேயே அவை மிக அருமையான வசனங்களாக இருப்பதைக் காணலாம். அவை ஆழமான இறையியல் சத்தியங்கள் புதைந்து காணப்படுகின்ற ஒரு பகுதியாகும். மேலெழுந்தவாரியாக அந்த வசனங்களை நாம் வாசித்துப் புரிந்துகொள்ள முடியாது. அந்த வசனங்களிலே இயேசு கிறிஸ்துவைப் பற்றி யோவான் நமக்கு எழுதுகிறார்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரே குமாரன், பிதாவினிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர், அவர் கர்த்தர், அவர் கடவுள் என்பதைத்தான் யோவான் இந்த நூல் முழுவதுமே நமக்கு விளக்குகிறார். ஆகவே ஆரம்பத்திலேயே எந்தவிதமான சாக்குப் போக்கும் சொல்லாமல், பீடிகை

போடாமல் அவர் வெளிப்படையாகவே இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அருமையான சத்தியங்களை இந்த வசனங்களிலே விளக்குவதை நாம் காண்கிறோம். யெகோவாவின் சாட்சிகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் முதல் இரண்டு வசனங்களை மட்டும் பயன்படுத்தி இயேசு கிறிஸ்து ஆண்டவர் இல்லை என்று சொல்லி வருகிறார்கள். அவர்கள் வேதத்தை மாற்றி, அதனுடைய சத்தியத்தைத் திரித்து அவ்வாறு சொல்லுகிறார்களே தவிர, யோவான் அவ்வாறு சொல்லவில்லை.

இயேசு கிறிஸ்து ஆண்டவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பலவிதமான தவறான போதனைகள் இந்த உலகத்திலே காணப்படுகின்றன. இயேசு மட்டுமே (Jesus only) என்று சொல்லுகிற ஒரு கூட்டம் இருக்கின்றது. இறையியல்பூர்வமாக அது மிகவும் தவறான ஒரு வாக்கிய பிரயோகமாகும், அந்தவிதத்தில் இயேசுவை விளக்குவது தவறு. வேறு சிலர் இயேசுவின் நாமத்தினால் மட்டுமே எவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும், திரித்துவ தேவனின் பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதுவும் முழுத் தவறு. திரித்துவ தேவனின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக மத்தேயு 28ல் காணப்படும் பிரதான கட்டளையில் ஆண்டவர் இயேசுவே சொல்லியிருக்கிறார்.

இறையியல் தவறுகள் மிகவும் ஆபத்தானவை. அதுவும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய இறையியல் தவறுகள் மிக மிக ஆபத்தானவை. வேதத்தை ஒரு சிறிதாவது நாம் மாற்றியமைத்துத் தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தால் நம்முடைய விசுவாசமே தவறானதாகப் போய்விடும். ஆகவே இயேசு கிறிஸ்து ஆண்டவர், அவர் கர்த்தர் என்பத நாம் மனதில் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். எத்தனையோ பிரசங்கங்களை நீங்கள் கேட்பீர்கள். இன்றைக்கு சபையில் மட்டுமல்ல, இணையதளங்கள் மூலமாக, மேலும் எத்தனையோ வழிகளில் அவற்றைக் கேட்பீர்கள். ஆனால் உங்கள் காதையும், மனத்தையும் கவனத்தோடு பயன்படுத்திக் கேளுங்கள். சத்தியத்திற்கு மாறானவைகளைக் கேட்டால் நம்முடைய இருதயம் பாதிக்கப்படும். ஆண்டவரைப் பற்றிய தவறான எண்ணங்களை நாம் கொண்டிருக்க வேண்டிய ஒரு பெரிய ஆபத்து ஏற்படும். அது உங்களுக்கு உதவியாக இருக்காது.

இயேசு ஆண்டவர், இயேசு ஆண்டவரைப் போன்றவரல்ல. இயேசு கர்த்தர். சபை வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளேயே மிகப்பெரிய இறையியல் ஆபத்துக்கள் எழுந்தன, போலிப் போதனைகள் உருவாகின. அத்தனை போலிப் போதனைகளுமே இயேசு கிறிஸ்துவுக்கு எதிரானவை. அதனால்தான் சபை வரலாற்றில் சபைகள் கூடி அந்த ஆபத்திலிருந்து சபைகளைப் பாதுகாப்பதற்காக விசுவாச அறிக்கைகளை எழுதி வைத்தார்கள். இந்த ஆக்கத்தில் அந்த இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் நமக்கு கொடுத்திருக்கின்ற அந்த அருமையான

இரட்சிப்பைப் பற்றியும் அலசி ஆராயப் போகிறோம். மூன்று தலைப்புகளில் அவற்றை நாம் பார்ப்போம்.

1. இரட்சிப்பு யாரிடமிருந்து வருகிறது?
2. இரட்சிப்பு எப்படிப்பட்டது?
3. இரட்சிப்பை எவ்வாறு அடைவது?

## 1. இரட்சிப்பு யாரிடமிருந்து வருகிறது?

இந்தப் பகுதியில் பதினோராவது வசனத்தைக் கவனித்தால், அந்த இரட்சிப்பை நமக்குக் கொடுக்கிறவரைப் பற்றி யோவான் இவ்வாறு விளக்குகிறார், "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." (யோவான் 1:11). இவர் யார் என்று பார்த்தால், ஆரம்பத்தில் யோவான் அவரைப் பற்றி நேரடியாக இயேசு என்று சொல்லாமல் "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தை என்பது இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட இன்னொரு பெயர். லோகாஸ் என்பது இதற்கான கிரேக்க வார்த்தை. இயேசுவே வார்த்தை. நம்முடைய கரத்தில் வைத்திருக்கின்ற வேத புத்தகம் இயேசுவினுடைய பேச்சாக இருக்கிறது. அது ஆண்டவருடைய வார்த்தையாக இருக்கிறது. ஆதியிலே வார்த்தை இருந்தது அதாவது ஆதியிலே இயேசு இருந்தார், அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாய் இருந்தது (யோவான் 1:1). இயேசு ஆண்டவர் என்பதை உறுதியாக யோவான் இங்கு விளக்குவதைப் பார்க்கிறோம்.

இன்னுமொரு தவறான போதனை இயேசு உருவாக்கப்பட்டார் என்பது. இயேசு உருவாக்கப்படவில்லை. அதனால்தான் யோவான் சொல்லுகிறார், ஆதியிலே வார்த்தை இருந்தது என்று. ஆதி என்பது எப்பொழுது? அனைத்தும் ஆரம்பித்தபோது, இந்த உலகம் ஆரம்பித்தபோது இயேசு தொடர்ந்து இருந்திருக்கிறார். அவர் ஆண்டவரோடு இருந்தார், பிதாவோடு இருந்தார், பிதா, குமாரன், ஆவியானவர் என திரித்துவ தேவனாக இருந்தார். இயேசு ஒருபோதும் எவராலும் உருவாக்கப்படவில்லை, அவர் எப்போதுமே இருந்திருக்கிறவரா யிருக்கிறார். ஆகவே இயேசு நித்தியத்திலிருந்து இருக்கிறார் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

யோவான் 3:16 எல்லாருக்கும் மிகவும் பரிச்சயமான வசனம். அவரைப் பற்றி ஆங்கிலத்தில் Only begotten Son என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இன்று சில ஆங்கில மொழிபெயர்ப்புகளில் மாற்றி ஒரே குமாரன் Only Son என்று மாற்றியிருக்கிறார்கள். Begotten என்ற வார்த்தையை எடுத்துவிட்டு Only Son என்று மொழிப்பெயர்த்துள்ளார்கள். இந்த மாற்றம் மூல வார்த்தையின் அர்த்தத்தை உள்ளபடியே விளக்காமல்,

இயேசு கிறிஸ்து பிதாவுக்கு ஒரே குமாரன் என்ற அர்த்தத்தை மட்டுமே தருகிறது. தமிழ் வேதத்தில் ஒரேபேறான குமாரன் என்று மொழிப்பெயர்த்துள்ளார்கள். என்றைக்காவது ஒரேபேறான குமாரன் என்றால் என்னவென்று சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? வேதத்தைப் படிக்கும்போது கேள்விகள் கேட்டு, வாசித்து, சிந்தித்துப் படிக்கவேண்டும்.

ஒரேபேறானவர் என்றால் என்ன அர்த்தம்? இந்திய வேதாகம சங்கம், அதாவது இந்திய மொழிகளில் எல்லா மொழிபெயர்ப்புகளையும் செய்கிற அந்தக் குழுவின் மொழிபெயர்ப்புப் பகுதிக்குத் தலைவராக இருக்கிறவரை ஆகஸ்டு 2025ல் நான் பெங்களூரில் சந்தித்தேன். அவரும் மிக விருப்பத்தோடு என்னை சந்திப்பதற்காக நேரம் கொடுக்கச் சொல்லிக் கேட்டிருந்தார். அவ்வாறு சந்தித்து, அவரோடு இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்த பொழுது நான் இந்த கேள்வியை அவர் முன் வைத்தேன். அது என்ன ஒரே பேறானவர்? அதற்கு அர்த்தம் என்ன? என்று கேட்டேன். நான் போய் சிந்தித்துப் பார்த்துவிட்டு அதற்கு பிறகு உங்களுக்குப் பதில் எழுதுகிறேன் என்று சொல்லி இருக்கிறார். இன்னும் பதில் வரவில்லை.

Only begotten என்பதற்கு ஆங்கிலத்தில் அவர் பிறப்பிக்கப்பட்டவர் என்று அர்த்தம். அதை மேலும் விளக்கினால், இயேசு நித்தியத்திலிருந்து பிதாவினிடமிருந்து பிறப்பிக்கப்படுகிறவர் என்று சொல்லலாம். இதனை Eternal generation of Sonship என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். அது ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய போதனைகளில் மிக மிக முக்கியமானது. அதனால்தான் ஆங்கில வேதத்தில் ஆரம்பத்தி லிருந்து begotten என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை நாம் நம் விருப்பத்திற்கு மாற்றிவிடக் கூடாது. தமிழ் வேதத்தில் அது எவ்வாறு இருந்திருக்க வேண்டுமென்றால், அவர் நித்தியத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டவர் என்றிருக்க வேண்டும். அதுதான் begotten என்ற வார்த்தைக்கு அர்த்தம். இருந்தாலும் “ஒரே பேறானவர்” என்பதில் உள்ளடக்கமாக இந்த அர்த்தம் அடங்கிக் காணப்படுகிறது. செம்மொழித் தமிழில், பேறு என்பதற்கு பெறுதல், பெற்றெடுக்கப்படல் என்ற அர்த்தமும் உண்டு. அதைத்தான் தமிழ் வேதம் பயன்படுத்தியிருக்கிறது.

இயேசு நித்தியத்திலிருந்து பிறப்பிக்கப்படுகிறார், இது திரித்துவத்தைப் பற்றிய மிக ஆழமான உண்மை. நமக்குப் புரிகிறதோ இல்லையோ ஆனால் நாம் நம்ப வேண்டிய உண்மை. சில காரியங்களை வேதத்திலிருந்து தத்துவ ரீதியில் புரிந்துகொள்ள முடியாது. அங்கே லாஜிக் வேலை செய்யாது. அதனால் அத்தகைய சத்தியங்களை மறுதலிக்காமல் நம்ப வேண்டியது நம் கடமை. ஆகவே இயேசு ஆதியில் இருந்தவர். நமக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறவர் சாதாரண, உருவாக்கப்பட்ட மனிதரல்ல. அவர் தேவன், அவர் கர்த்தர், அவர் வார்த்தையாக இருக்கிறார்.

யோவான் தன்னுடைய நூலில் இயேசு ஆண்டவர், இயேசு கர்த்தர் என்பதை நிரூபிப்பதற்காக அநேக சாட்சிகளை நம்முன் வைக்கிறார். அவர் அறிமுகப்படுத்தும் முதலாவது சாட்சி யோவான் ஸ்நானன். ஆண்டவராகிய இயேசு வருவதற்கு முன்பே அவருடைய வருகைக்குப் பாதை ஏற்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டவன் யோவான்ஸ்நானன். யோவான் ஸ்நானன் வந்தபோது இயேசுவுக்கு சாட்சியாக இருக்கிறான். அவன், இயேசுவைப் பார்த்து தேவ ஆட்டுக்குட்டியானவர் என்று அவரை அறிமுகப்படுத்துகிறான். இயேசு வருவதற்கு முன்பாகவே ஒரு தேவதூதன் யோவான் ஸ்நானனுடைய தகப்பன் முன் தோன்றி அவனுடைய பிறப்பைப் பற்றி விளக்கியிருப்பதை நாம் வாசிக்கிறோம்.

யோவான் ஸ்நானன் ஆண்டவர் அல்ல, அவனுக்கு தெய்வீகம் இருக்கவில்லை. அவன் சாதாரண மனிதன். இருந்தபொழுதும் அவனும் ஒரு விதத்தில் விசேஷமாகப் பிறந்தான். ஏன்? இயேசுவுக்கு பாதை அமைப்பதற்காக அவன் பிறந்திருக்கிறான். அவன் ஒளி அல்ல, அவன் சாட்சி மட்டுமே. இயேசு ஒளியாய் இருக்கிறார், அந்த வார்த்தை ஒளியாய் இருக்கிறது என்று யோவான் சொல்லுகிறார். அந்த ஒளி இந்த உலகத்திற்கு ஒளிவீசுவதற்காக வந்தது, அந்த ஒளிக்குச் சாட்சியாக வந்தவன் தான் யோவான்ஸ்நானன் என்று அறிகிறோம். யோவான்ஸ்நானன் சொன்ன ஒரு முக்கியமான உண்மை, நான் குறைய வேண்டும் அவர் பெருக வேண்டும் என்பது. என்னைப் பார்க்காதீர்கள், நான் அல்ல ஒளி, நான் அல்ல வார்த்தை. அந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே வார்த்தையாக இருக்கிறார் என்று அவன் பிரசங்கித்திருக்கிறான்.

மேலும் 29ம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம், "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." (யோவான் 1:29). உலகத்தின் பாவத்தைத் தன்னிலே சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி என்று இயேசுவைக் குறித்துச் சொல்லுகிறான். மேலும் "எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்." (யோவான் 1:30–32).

எந்த ஒரு வேளையிலும் கூட யோவான்ஸ்நானன் மனிதர்கள் தன்னைப் பின்பற்றும்படி எதையுமே சொல்லவில்லை. அவன் சொன்ன அத்தனையும் மக்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கவேண்டும் என்பதற்காகவே இருந்தன. "நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்." (யோவான் 1:33). ஆகவே இயேசு கிறிஸ்து அந்த இரட்சிப்பை நமக்கு கொடுக்கிறவர். வார்த்தையாக இருக்கிறவர், ஒளியாக இருக்கிறவர், கர்த்தர் அந்த இரட்சிப்பை மனிதர்களுக்கு அளிக்கிறார். அப்போஸ்தலர் 4:12ம் வசனத்தில், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து மட்டுமே அந்த இரட்சிப்பைக் கொடுக்கிறவராக இருக்கிறார். இவ்வாறு வேதத்தில் பல பகுதிகளில், புதிய ஏற்பாட்டை வாசிக்கிறபோது நமக்கு இரட்சிப்பை அளிக்கிறவர் இயேசு, அவருடைய நாமத்தின் மூலமாக அந்த இரட்சிப்பு வருகிறது என்பதைக் காணமுடியும். கடவுளுக்கும் மனிதர்களுக்கும் மத்தியிலே மீட்பராக இருக்கிறவர் இயேசு கிறிஸ்து மட்டுமே என்று பவுல் தீமோத்தேயுக்கு எழுதுகிறார்.

இரட்சிப்புக்கு நாம் யாரிடத்தில் வரவேண்டும்? இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டும். ஆனால் உங்களுக்கு இயேசு கிறிஸ்து யார் என்பது முதலில் தெரிந்திருக்க வேண்டும். அவர் சாதாரண மனிதன் அல்ல, ஒரு தீர்க்கதரிசி அல்ல, வெறும் அற்புதங்களை மட்டும் செய்கிறவரல்ல. அவர் ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார். அவர் கர்த்தர். ஆகவே இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவரைப் பற்றி வேதம் போதிக்கின்ற அத்தனை சத்தியங்களின் அடிப்படையில் அந்த இயேசு கிறிஸ்துவை நாம் பார்க்க வேண்டுமே தவிர, வேறுவிதமாக நாம் அவரைக் கணிக்கக்கூடாது. சுவிசேஷம் சொல்லுகிறோம் என்கிற பெயரில் அனேகர் இயேசுவை நம்புங்கள், இயேசுவை விசுவாசியுங்கள் என்று கிளிப்பிள்ளை போல சொல்லுவார்கள். ஆனால், அந்த இயேசு யார்? என்பதை அவர்கள் தெளிவாக விளக்குவதில்லை. உண்மைதான், இயேசு இந்த உலகத்திலே மனிதனாகப் பிறந்தவர். அந்த மனிதப் பிறப்பு இரட்சிப்பை அவர் நிறைவேற்ற அவசியமாயிருந்தது. அவர் பிறந்தபோது வெறும் மனிதனாக மட்டுமல்லாமல் தெய்வீகத்தையும் தன்னில் கொண்டிருந்து பிறந்தார். எந்த நேரத்திலும் எந்த வேளையிலும் மானுடமும், தெய்வீகமும் அவரில் பிரியாதபடி இணைந்திருந்தன.

இன்னும் ஒரு போலிப் போதனை இருக்கிறது. அதாவது ஆண்டவர் சிலுவையில் இறக்க முடியாது, அதனால் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபொழுது அவருடைய தெய்வீகம் ஓய்வெடுத்துக் கொண்டது என்பது அந்தப் போதனை. இப்படி விளக்குகிறவர்கள் சிலுவையில் இறந்தது மனிதனாகிய இயேசு மட்டுமே, அவ்வேளையில் அவரில் தெய்வீகம் காணப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். இது மிக ஆபத்தான போலிப் போதனை. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் தேவனும் மனிதனுமாய் மரித்தார். நீங்கள் கேட்கலாம், தெய்வீகம்

எப்படி மரிக்கும்? என்று. அதை நீங்கள் ஆண்டவரிடத்தில் கேளுங்கள். வேதம் எதைச் சொல்லுகிறதோ அதை மட்டுமே விளக்க முடியும்.

அவர் மரித்த பொழுது அவர் தெய்வீகத்தோடும் மானுடத்தோடும் மரித்தார். ஏன்? வெறும் மனிதனாக மட்டும் மரித்திருந்தால் நம்முடைய பாவத்தை அவரால் போக்க முடியாது. உலகத்தில் எந்த மனிதனும் தன்னுடைய பாவத்தைப் போக்கிக்கொள்ள முடியாததால்தான், பிதா தன்னுடைய ஒரே குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி வைத்தார். அவர் தெய்வீகத்தோடும் மானுடத்தோடும் பிறந்தார். அவர் தெய்வீகத்தோடு மட்டும் மரித்திருக்க முடியாது. ஏன்? அவருக்கு முழு மானுடமும் அவசியமாக இருந்தது. அவர் தன்னுடைய மானுடத்தில் தேவனுடைய அத்தனை கட்டளைகளையும் பூரணமாக நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதையெல்லாம் செய்துமுடித்து, தேவனும் மனிதனுமாய் அவர் சிலுவையில் மரித்தார். இந்தச் சத்தியத்தை நாம் நம்பி விசுவாசிக்க வேண்டும். உலகத்தில் எந்த ஒரு மனிதனோ, எந்த ஒரு சக்தியோ செய்யமுடியாத மாபெரும் அற்புதத்தை ஆண்டவர் தன்னுடைய ஒரே குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்து, அவரைச் சிலுவையில் மரிக்கும்படியாகச் செய்து நம்முடைய பாவங்களுக்கு நிவாரணத்தை ஏற்படுத்தினார். தேவனும் மனிதனுமாகியவர் இயேசு கிறிஸ்து. அவரே நமக்கு இரட்சிப்பைத் தருகிறார். அவரே கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் மீட்பராக இருந்து நமக்காக மரித்தவர்.

## 2. இரட்சிப்பு எப்படிப்பட்டது?

இயேசு கிறிஸ்து அளிக்கும் அந்த இரட்சிப்பைப் பற்றி இங்கே யோவான் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். 13ம் வசனத்தில் முதலாவதாக, எதிர்மறையாகச் சொல்லுகிறார், அதற்குப் பின் நேர்மறையாக விளக்குகிறார். “அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.” (யோவான் 1:13). அந்த இரட்சிப்பு இரத்தத்தினால் நம்மிடம் வரவில்லை. கிரேக்க மொழியில் இரத்தத்தில் என்று ஒருமையில் இல்லாமல் பன்மையில் காணப்படுகிறது. ஏன் பன்மையில் எழுத வேண்டும்? இரத்தத்தினால் என்று சொன்னால் அதற்கு அர்த்தம் என்ன? அந்த இரட்சிப்பு மானுட சந்ததியின் வழியில் நமக்கு வரவில்லை. பெற்றோர்கள் அந்த இரட்சிப்பைத் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாது.

தென்னிந்திய திருச்சபை போன்ற பாரம்பரிய சபையிலிருந்து வந்த ஒருவரிடம் நான் உங்கள் சாட்சியைச் சொல்லுங்கள் என்று ஒருமுறை கேட்டேன். அவர்: பாஸ்டர் நான் பிறந்ததிலிருந்தே கிறிஸ்தவன் என்று சொன்னார். பிறந்ததிலிருந்து ஒருவரும் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. பிறப்பிலிருந்து நாம் எல்லோரும் பாவிகள். எந்த ஒரு

நன்மையும் இல்லாமல், கேடானவர்களாக, கேடான இருதயத்தைக் கொண்டவர்களாக, கேட்டை மட்டுமே சிந்திக்கிறவர்களாக, கேட்டை மட்டுமே செய்கின்ற ஆற்றலைக் கொண்டிருக்கிறவர்களாகப் பிறந்திருக்கிறோம். நல்லது என்பது நம்முடைய சிந்தனையில் வரவே வராது. ஆகவே எல்லா மனிதர்களும் பாவிகளாகி தேவ மகிமையை இழந்து நிற்கிறார்கள். ஒருவனாகிலும் நன்மை செய்வதில்லை.

ஆண்டவர் பரலோகத்திலிருந்து பார்க்கிறபோது எல்லோரையும் பாவிகளாகத்தான் பார்க்கிறாரே தவிர நன்மை செய்கிறவர் ஒருவரும் இல்லை. அப்படி யாராவது இருந்தால் ஆண்டவர் இயேசு வந்திருக்க அவசியமில்லை. இந்த உலகத்து மனிதர்களிடத்தில் நன்மை இருக்குமானால் ஒரே குமாரன் இங்கு வர வேண்டிய அவசியம் என்ன? பாவத்திற்காக அவர் மரிக்க வேண்டிய அவசியம் என்ன? நாம் பாவிகளாக இருப்பதனால்தான் தெய்வமே அந்தச் சிலுவையில் தன்னுடைய இரத்தத்தைப் பலியாக, நம்முடைய பாவத்தைத் தீர்ப்பதற்காகக் கொடுத்தார் என்று நாம் வேதத்தில வாசிக்கிறோம். ஆகவே குடும்பத்திலிருந்து சந்ததியாக எவருமே கிறிஸ்தவனாக வர முடியாது. பெற்றோர்கள் அதைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாது.

யூதர்களுக்கு ஒரு பெரிய பிரச்சனை இருந்தது. அது என்ன? ஆபிரகாமைத் தங்களுடைய பிதாவாக அவர்கள் மதித்தார்கள். அந்தளவுக்கு ஆபிரகாமை அவர்கள் உயர்ந்த இடத்தில் வைத்திருந்தார்கள். நாங்கள் ஆபிரகாமின் சந்ததி, அவர் எங்களுடைய பிதா, ஆகவே நாங்கள் விசேஷமான மனிதர்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அது உண்மையல்ல. இயேசு சொல்லுகிறார், அந்த ஆபிரகாமுக்கு முன்பே நான் இருந்தேன். அந்த ஆபிரகாமுக்கு இரட்சிப்பை நானே கொடுத்தேன். ஆபிரகாம் விசுவாசித்தான், அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் ஆதி 12ல் மட்டுமல்ல, அது ரோமர் நான்காவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அத்தனை உயர்ந்த ஆபிரகாமுங்கூடத் தன்னுடைய வாழ்க்கையில் பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்டு இரட்சிப்பு அடையவேண்டியிருந்தது. ஆபிரகாமை இரட்சித்தவர் கர்த்தர்; இயேசு கிறிஸ்து. ஆகவே இரட்சிப்பு குடும்பத்தில் இருந்து வர முடியாது. அதை யாரும் யாருக்கும் கொடுக்க முடியாது.

சுவிசேஷத்தை நாம் மற்றவர்களுக்குச் சொல்ல முடியும். நிச்சயமாக அது நம்முடைய கடமை. அதைச் சொல்லுவது மட்டுமே நம்முடைய கடமை. அந்த சுவிசேஷத்தைச் சொன்ன பிறகு அந்த நிமிடத்திலேயே அவனை ஆண்டவரிடத்தில் வரவைக்கின்ற வேலை உங்களுடைய கையில் இல்லை. உங்களால் ஒன்றுமே முடியாது. அந்த வேலையை ஆண்டவர் நம்மிடத்திலே கொடுக்கவில்லை. அது யாருடைய வேலை?

பரிசுத்த ஆவியானவருடைய வேலை. அவர் நம்முடைய வார்த்தைக்கு கட்டுப்படுகிறவரல்ல. இந்த உலகத்தில் நீங்கள் உயிரோடு வாழ்கிறவரை சுவிசேஷத்தைச் சொல்லி மரிப்பது மட்டுமே உங்களுடைய பணியாக இருக்கலாம். நீங்கள் சொன்ன சுவிசேஷத்தின் மூலம் எவரும் ஆண்டவரிடத்தில் வருவதை நீங்கள் காணாமலேயே மரித்துவிடலாம். நீங்கள் மரித்த பிறகு நீங்கள் சுவிசேஷம் சொன்ன எவருக்காவது இரட்சிப்பு கிடைத்தாலும் கிடைக்கும். அல்லது, சுவிசேஷத்தை உங்களிடம் கேட்ட ஒருவர் நாடு கடந்து இன்னொரு நாட்டில் வாழ்கிறபோது இரட்சிக்கப்பட்டு அவ்வாறு நடந்தது வாழ்நாள்வரை உங்களுக்குத் தெரியாமலேயே போகலாம். ஏன்? இரட்சிப்பு ஆண்டவருடைய சித்தத்தின்படி, அவருடைய நேரத்தின்படி ஒருவனுக்கு வருவதே தவிர, யாரும் எவருக்கும் அதைக் கொடுக்க முடியாது.

எத்தனை பெரிய பிரசங்கியாக இருந்தாலும் எந்த ஒரு பாவியையும் கரை சேர்க்க முடியாது. அது ஆவியானவருடைய வேலை. அதைத்தான் நிக்கொதேமுவுக்கு ஆண்டவர் சொல்லுகிறார். காற்று வீசுவதை நீ பார்த்திருக்கிறாயா? அது எங்கிருந்து வருகிறது எங்கு போகிறது என்பது உனக்கு தெரியாது, உன்னால் அதை உணர மட்டுந்தான் முடியும். அதுபோல்தான் இரட்சிப்பும். அது நடந்த பிறகுதான் நமக்கு நடந்திருக்கிறது என்பதை நாம் உணர்கிறோமே தவிர, அது எப்போது எந்த நேரத்திலே எப்படிக் கிடைக்கிறது என்பது நமக்குத் தெரியாது. அதைச் செய்கிறவர் பரிசுத்த ஆவியானவர். ஆகவே அது இரத்தத்தின் மூலமாக வராது.

அடுத்தாக, மாம்ச சித்தத்தின் மூலமாகவும் இரட்சிப்பு கிடைக்காது. அதாவது நம்முடைய மாம்சத்தில் இருந்தோ, இரட்சிக்கப்படப் போகின்ற ஒருவனுடைய மாம்சத்தில் இருந்தோ அது புறப்படாது. சில பேர் இதுபற்றிய தவறான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். அதாவது இரட்சிப்புக்கு ஆண்டவர் 50 வீதம் தன்னுடைய வேலையைச் செய்யவேண்டும், மீதி 50 வீதத்தை நாம் செய்யவேண்டும். ஆகவே நான் ஆண்டவரோடு இணைந்து வேலை செய்யாவிட்டால் இரட்சிப்பு ஒருவனுக்குக் கிடைக்காது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இத்தகைய எண்ணம் கொண்டிருக்கும் புத்திமானுக்கு நான் என்ன பதில் சொல்வது? அந்த விதத்தில் இரட்சிப்பை நாம் அடையமுடியுமென்றால் அது மிகச் சாதாரணமானது. மாம்சத்தின் பங்கைக்கொண்டிருக்கும் எதுவும் மிகச் சாதாரணமானதும், நிலையற்றதுமானது.

நாம் பிறப்பிலேயே பாவிகளாகப் பிறந்திருக்கிறோம். பாவி அந்த இரட்சிப்புக்கு எதையும் செய்யக்கூடிய எந்தவிதமான தகுதியையும் கொண்டிருக்கவில்லை. நாம் பிச்சைக்காரர்கள் போல இருக்கிறோம். இரட்சிப்பு ஆண்டவர் நமக்கு போடுகிற பிச்சையாகும். எந்தவித நன்மையும் நம்மிடத்தில் இல்லாமல் இருக்கிறபொழுது நாம் எப்படி

இரட்சிப்புக்காக ஆண்டவருக்கு உதவ முடியும்? அந்த இரட்சிப்பை அடைவது மட்டுந்தான் நம்முடைய வேலை. ஆகவேதான் பவுல் எபேசியர் 2:8–10 வசனங்களில் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" என்று சொல்லுகிறார். நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். புதிய சிருஷ்டியாக இருக்கிறோம், நம்மை நாமே சிருஷ்டித்துக் கொள்ளுவதில்லை. ஆண்டவர் நம்மைப் புதிய சிருஷ்டியாக மாற்றுகிறார்.

ரோமர் ஐந்தாவது அதிகாரத்தில் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" என்றிருக்கிறது. (ரோமர் 5:8). அதற்கு அர்த்தம் என்ன? நாம் பாவிகளாக பாவ நிலையில் இருந்தபொழுது, பாவத்தைத் தவிர வேறு சிந்தனையை நாம் கொண்டிராமல் இருந்த பொழுது, பாவத்தை எப்படிச் செய்யலாம் என்ற சிந்தனையைத் தொடர்ந்து கொண்டிருந்த பொழுது ஆண்டவர் நமக்காக மரித்தார். நாம் நல்லவர்களாக மாற வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்தபோது அல்ல; தொடர்ந்து பாவத்திலேயே மூழ்கிக் கொண்டிருந்த வேளையிலே அவர் நமக்காக மரித்தார்.

நாம் எவ்வளவு மோசமானவர்கள் தெரியுமா? அதனால்தான் நம்முடைய இரட்சிப்புக்கு நாம் எந்தவிதத்திலும் நம்முடைய முதுகை தட்டிப் பாராட்டிக்கொள்ள முடியாது. அது ஆண்டவருடைய கிருபையினால் கிடைத்தது. விசுவாசத்தின் மூலமாகக் கிடைத்தது. நாம்தான் விசுவாசிக்கிறோம் இருந்தபொழுதுங்கூட அந்த விசுவாசம் இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கின்ற ஈவு. நாம் எதிர்பார்க்காத வேளையிலே, நாம் நினைத்துப் பார்த்திராதபோது, ஆண்டவரைப் பற்றிய எண்ணமே நமக்கு வராத வேளையிலே, அந்தச் சுவிசேஷத்தை நாம் கேட்டு கொண்டிருந்தபோது நமக்கே தெரியாமல் ஆண்டவர் நம்மில் ஆவியின் மூலமாகச் செய்கின்ற கிரியைதான் மறுபிறப்பாகும்.

மறுபிறப்பு நிகழ்ந்த பிறகு நீங்கள் புது சிருஷ்டியாக பரிசுத்த ஆவியினால் மாற்றப்பட்ட பிறகுதான் உங்களுக்கே தெரிய வருகிறது இயேசு கிறிஸ்து தேவன் என்பது. அதனால்தான் அந்தக் குருடன் சொன்னது போல, நான் குருடனாய் இருந்தேன் இப்பொழுது எனக்கு பார்வை வந்திருக்கிறது. எனக்கு நடந்ததை நான் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? நாம் எல்லோரும் குருடர்களாக இருந்திருக்கிறோம், பாவிகளாக இருந்திருக்கிறோம். நம்மைப் பற்றி வேதம் சொல்வதெல்லாம்

நாம் தேவனுக்கு எதிரிகள். அவருக்கு எதிரிகளாக இருந்திருக்கிறோம். பாவத்தைத் தவிர வேறெந்த எண்ணத்தையும் கொண்டிராதவர்களாக இருந்திருக்கிறோம். ஆனால் தேவனுடைய கிருபை நம்மை மாற்றியது. மாம்சத்தினால் அது கிடைக்காது. உங்களுக்கு நீங்களே இரட்சிப்பைத் தந்துவிட முடியாது. ஆண்டவரோடு அந்த இரட்சிப்பு அடையும் விஷயத்தில் எந்த விதத்திலுமே உங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை.

மூன்றாவதாக, யோவான் சொல்லுகிறார், இரத்தத்தினாலுமல்ல மாம்ச சித்தத்தினாலுமல்ல, புருஷனுடைய சித்தத்தினாலுமல்ல என்று. இந்த விதத்திலும் இரட்சிப்பை அடைய முடியாது. இது என்ன புருஷனுடைய சித்தம்? இது வடமொழித் தமிழ். வடமொழியில் புருஷன் என்று சொன்னால் மனுஷன் அல்லது ஆண் என்று அர்த்தம். ஆகவே மனிதர்களால் அல்ல. மாம்ச சித்தத்தினாலும் அல்ல. காரணம் என்ன? வேதம் நம்மைப் பாவிகள் என்று சொல்லுகிறபோது, அந்தப் பாவம் மனிதனுடைய அத்தனை பாகங்களையும் பாதித்திருக்கிறது என்பது அதற்கு அர்த்தம். அது அவனுடைய இருதயத்தை முழுமையாகப் பாதித்திருக்கிறது, அவனுடைய அனைத்து அங்கங்களைப் பாதித்திருக்கிறது,

பாவம் மனிதனுடைய சித்தத்தையும் பாதித்திருக்கிறது. சித்தத்திற்கு ஆங்கிலத்தில் Will என்று பெயர். இந்தச் சித்தத்தின் மூலமாகத்தான் நாம் ஒரு தீர்மானத்தை எடுக்கிறோம். சித்தம் பாவத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறபோது அந்தப் பாவச் சித்தம் எப்படி ஆண்டவரை நோக்கி நகர முடியும்? முடியாது. அதனால்தான் மனித சித்தத்தினாலுமல்ல என்று யோவான் சொல்லுகிறார். ஆனால் இந்தச் சித்தம் ஆண்டவரை நேசிப்பதற்காகப் புதிப்பிக்கப்பட வேண்டும். சித்தம் மறுரூபமாக்கப்பட வேண்டும். அது எப்பொழுது மறுரூபமாக்கப்படுகிறது? எப்பொழுது புதுப்பிக்கப்படுகிறது? பரிசுத்த ஆவியானவர் மறுபிறப்பாகிய கிரியையை மனிதனுடைய இருதயத்திலே நிகழ்த்துகிற பொழுது அந்த சித்தம் புதுப்பிக்கப்படுகிறது. அப்படிப் புதுப்பிக்கப்படுகிறபோதுதான் அவன் இயேசுவை நேசிக்க ஆரம்பிக்கிறான். இயேசு என்னுடைய தேவன் என்று சொல்ல ஆரம்பிக்கிறான்.

யோவான் இதுவரை இரட்சிப்பு என்னென்ன முறையில் ஒருவனுக்குக் கிடைக்காது என்று விளக்கிவிட்டு, அடுத்ததாக என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள். அவர் என்ன சொல்லுகிறார், இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனாலே (But God) பிறந்தவர்கள் என்கிறார். எபேசியர் இரண்டாம் அதிகாரம் நான்காவது வசனத்திலும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. பெரும் பிரசங்கியான மார்டின் லாயிட் ஜோன்ஸ், "ஆனால் தேவன்" (But God) என்ற இரண்டு வார்த்தைத்தைகளில் ஒரு அருமையான பிரசங்கத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் மகா மோசமான நிலையில் இருந்தபோது, ஆவிக்குரிய எதையுமே நமக்குச் செய்துகொள்ள முடியாத நிலையில்

இருந்தபொழுது, கேவலமானவர்களாக இருந்தபோது, தேவனோ, மகா இரக்கமும் கிருபையும் கொண்டவராக நமக்கு இரட்சிப்பைக் கொடுத்தார்.

நிக்கொதேமு தன்னுடைய வாழ்க்கை முழுவதும் எதை நம்பிக்கொண்டிருந்தான்? நியாயப்பிரமாணத்தை ஒவ்வொரு நாளும் கஷ்டப்பட்டு நிறைவேற்றி வந்தால் பரலோகம் போய்விடலாம் என்று அவன் நம்பி வாழ்ந்தான். அவன் பழைய ஏற்பாட்டை யூதர்களுக்குப் போதித்த ஒரு பெரிய போதகனாக இருந்தான். ஆனால் இயேசுவினுடைய போதனைகளைக் கேட்டபோது அவனுக்குப் பயம் வந்துவிட்டது. அதனால்தான் நடு இரவில் இயேசுவைப் பார்க்க வருகிறான். வந்து, ஐயா, நான் ஏதோ தவறு செய்துவிட்டேன் போலிருக்கிறது. நீங்கள் எனக்கு விளக்கம் தாருங்கள். இரட்சிப்பை எவ்வாறு அடைவது என்பதுதான் அவன் கேட்க வந்த கேள்வி. ஆனால் அவன் அதைக் கேட்பதற்கு முன்பே ஆண்டவர் அதற்கான பதிலைச் சொல்லிவிடுகிறார்.

எல்லா மனிதர்களுடைய இருதயங்களிலும் என்ன இருக்கிறது என்று தெரிந்திருந்ததனால், நிக்கொதேமு தன்னைத் தேடி வரப்போகிறான் என்பது இயேசுவுக்கு தெரிந்திருந்ததனால், நீ மறுபடியும் பிறக்க வேண்டும் என்று அவனைப் பார்த்துச் சொன்னார். அதற்கு என்ன அர்த்தம்? நிக்கொதேமுவே, நீ பரலோகம் போவதற்கு உன்னால் என்ன செய்ய முடியும் என்றுதான் இதுவரை சிந்தித்திருக்கிறாயே தவிர, அது உனக்கு வெளியிலிருந்து ஒருவர் உன்னில் செய்ய வேண்டியது என்பது தெரியாமல் வாழ்ந்திருக்கிறாய். இயேசு அளித்த மறுபிறப்புப் பற்றிய அந்தப் போதனை மறைமுகமாக பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. ஆனால், பழைய ஏற்பாட்டுப் போதகனான நிக்கொதேமுவுக்கு அது தெரிந்திருக்கவில்லை.

மறபிறப்பு பற்றி இயேசு தந்த போதனை எரேமியா, எசேக்கியல் ஆகிய புத்தகங்களில் தரப்பட்டிருக்கிறது. அங்கு ஆண்டவர் என்ன விளக்கமளித்திருக்கிறார்? ஒரு காலம் வரப்போகிறது, அப்போது நான் மனிதர்களுடைய கல்லான இருதயத்தை எடுத்துவிட்டு மிருதுவான இருதயத்தைக் கொடுக்கப் போகிறேன். அதற்கு என்ன அர்த்தம்? இருதயங்களை நான் மாற்றப் போகின்றேன், நியாயப்பிரமாணத்தை அதிலே விதைக்கப் போகிறேன். ஆகவே அவர்கள் என்னை முழுமனத்தோடு நேசித்து என்னுடைய கட்டளைகளைப் பின்பற்றப் போகிறார்கள் என்பதே.

நிக்கொதேமுவுக்கு, அவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது தெரிந்திருக்கவில்லை. அது ஆண்டவர் நம்மில் செய்கின்ற காரியம். தமிழ் வேதத்தில் அதற்குப் பெயர் ஜெநிப்பிப்பது அல்லது உயிர்ப்பிப்பது. அவர் நமக்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்க வேண்டும். ஆகவே இரட்சிப்பு மனிதர்கள் மூலமாக வர முடியாது, குடும்பங்களின் வழியில் வர

முடியாது, வம்சா வழியில் வர முடியாது, ஆவிக்குரியவர்களாக இல்லாத நாமே நம்மில் எதையும் ஆவிக்குரியதாக மாற்றிக்கொள்ள முடியாது. ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுக்கும்போது எப்படி வாங்கிக்கொள்கிறானோ அதேபோல் ஆண்டவரிடத்திலிருந்து ஆவிக்குரிய இருதயத்தை வாங்கிக்கொள்ள வேண்டியதுதான் நம் வேலை. யார் தலையிலும் கையை வைத்து ஜெபம் பண்ணி அதை நாம் செய்யமுடியாது. அப்படிச் செய்கிற போதகர்கள் பெரும் பாவம் செய்கிறார்கள். நான் சொல்லப்போகிற ஜெபத்தை திருப்பிச் சொல்லுங்கள், அதை செய்து முடித்த உடன் பரலோகம் போய்விடலாம் என்கிறார்கள். அது முடியவே முடியாது.

பில்லி கிரகாம் ஒரு பெரிய மனுஷர். சாகப்போகிற நேரத்தில் என்ன சொன்னார் தெரியுமா? நான் கை உயர்த்த சொன்ன எவ்வளவோ பேர், 90 வீதம் பரலோகம் போகப்போவதில்லை என்று சொல்லிட்டு அவரும் மரித்துவிட்டார். அப்போதுதான் அவருக்குத் தெளிவேற்பட்டிருக்கிறது, கையை உயர்த்தி ஆண்டவரை ஏற்றுக்கொள்ள வைக்கின்ற காரியம் எவ்வளவு தவறானது என்று. நீங்களும் இதுபோன்று கூட்டத்தில் எங்கேயாவது கையை உயர்த்தி ஆண்டவரை ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்று நம்பி வாழ்கிறீர்களா? இருதயத்தில் இந்நேரமே சிந்தித்துப் பார்த்து, ஆண்டவர் என்னுடைய இருதயத்தை மாற்றி இருக்கிறார், அவரைத் தவிர வேறு தேவர்கள் உலகத்தில் இல்லை, அவர் மட்டுமே தேவன். அவர் தேவனாக இருக்கிறார் என்பதற்குச் சாட்சி என்னுடைய இருதயத்தில் இருக்கிறது. அவர் மேல் எனக்கு அளவில்லாத நேசம் இருக்கிறது. அவருடைய வார்த்தைகளை அன்றாடம் தொடர்ந்து பின்பற்ற என்னால் முடிந்ததையெல்லாம் செய்து கொண்டிருக்கிறேன், அன்றாடம் என்னுடைய வாழ்க்கையிலே நான் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பாவத்தைத் தொடர்ந்து வெறுத்து வாழ்கின்ற ஒரு இருதயத்தைக் கொண்டிருக்கிறேன். இப்படியான சிந்தனைகள் இருந்தால் மட்டும்தான் உங்களுக்கு இரட்சிப்பின் நிச்சயம் இருக்கும். அந்த இரட்சிப்பின் நிச்சயம் இல்லாதவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாகப் போலியாக எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது. இரட்சிப்பு ஆண்டவரிடத்திலிருந்து வருவது. அவர் ஈவாகக் கொடுப்பது. அந்த இரட்சிப்பின் நிச்சயம் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கிறதா என்று ஆராய்ந்து பாருங்கள்.

### 3. இரட்சிப்பை எவ்வாறு அடைவது?

கடைசியாக, இந்த இரட்சிப்பு கிறிஸ்துவிடமிருந்து எப்படி நமக்குக் கிடைக்கும்? யோவான் பதினோராவது வசனத்தில் சொல்லுகிறார், அவர் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தார் ஆனால் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் என்ன செய்தார்கள்? அவரை நிராகரித்தார்கள். இயேசு ஒரு யூதன். யூதர்கள் மத்தியிலே அவர் பிறந்தார்.

அப்படிப் பிறக்க வேண்டியது தேவனுடைய நியதியாக இருந்தது. இருந்தபோதும் அந்த யூதர்கள் அவரைத் தேவனாக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அவரை நிராகரித்தார்கள் என்று அறிகிறோம்.

பழைய ஏற்பாடு மேசியா வரப்போவதை முன்கூட்டியே அறிவித்திருந்தது. எல்லாத் தீர்க்கதரிசிகளும் அந்த மேசியாவின் வருகையைப் பற்றி விளக்கியிருக்கிறார்கள். இருந்தபோதும் இந்த யூதர்களால் இயேசுவில் அந்த மேசியாவைப் பார்க்கமுடியவில்லை. அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஏன்? சாதாரண ஒரு தச்சனுக்கு மகனாகப் பிறந்தவன் எப்படி மேசியாவாக இருக்க முடியும்? என்று நினைத்தார்கள். சாதாரணமாக அவரைப் பார்க்கிறபோது இந்த உலகத்தில் இருக்கிற மனிதர்களைப்போலவே அவர் தோற்றமளித்தார். தெய்வீகத்துக்குரிய எந்த அடையாளங்களும் இயேசுவிடத்தில் வெளிப்புறமாக இருக்கவில்லை. ஆகவே அவர்கள் அவரை நிராகரித்தார்கள்.

உண்மையில் அந்த யூதர்கள் அவரை ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள், எப்படித் தெரியுமா? இயேசுவின் போதனைகளைக் கேட்கிறபோது அவர் ஒரு பெரிய போதகர் என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். இயேசு, நான் ஒரு நல்ல போதகன் என்று மட்டும் சொல்லியிருந்தால் அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். அல்லது இயேசு தன்னை ஒரு தீர்க்கதரிசியாக மட்டும் காட்டியிருந்தால் நிச்சயமாக அவரை ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்கள். எத்தனையோ தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து உன்னையும் ஒரு தீர்க்கதரிசியாக நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று சொல்லியிருப்பார்கள். வெறும் அற்புதங்களை மட்டும் செய்து, அத்தோடு நிறுத்தியிருந்தால் அவர்கள் நிச்சயமாக அவரை ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் இயேசு என்ன செய்தார்? யூதர்கள் கனவிலும் நினைத்திராத வார்த்தைகளை அவர் சொல்ல ஆரம்பித்தார்.

இயேசுவை அவர்கள் நிராகரித்ததற்கு என்ன காரணம்? முதலாவது, ஆபிரகாமுக்கு பிதா நான் என்று அவர் சொன்னார். யோவான் 8:53ல் “எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள்” என்று வாசிக்கிறோம். அதைக் கேட்ட யூதர்களுக்கு கடும் கோபம் வந்தது. முப்பது வயதுக்குள்ளாக இருக்கிற நீ, உன்னை எப்படி எங்களுடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு பிதா என்று சொல்ல முடியும்? யோவான் 8:56ல் “உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்” என்று இயேசு சொல்லுகிறார். இதைக் கேட்டு யூதர்கள் சும்மா இருப்பார்களா? அவரை அடித்துக்கொல்லுவதற்கு உடனே கல்லை எடுத்தார்கள். ஏன்? இயேசு தன்னை வெறும் போதகனாக மட்டும் காட்டிக்கொள்ளவில்லை, அற்புதங்கள் செய்கிறவராக மட்டும் காட்டிக்கொள்ளவில்லை, ஒரு

தீர்க்கதரிசியாக மட்டும் காட்டிக்கொள்ளவில்லை, அவர் ஆபிரகாமுக்கு முன்னால் இருந்த தேவனாய் இருந்தார்; அதையே அவர் விளக்கியிருந்தார். அதனால் யூதர்கள் அவரை நிராகரித்தார்கள். யோவான் 8:56–ல் "அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." யாத்திராகமத்தில் கர்த்தர் பயன்படுத்திய அதே வார்த்தைகளை இயேசு இங்கே பயன்படுத்தியிருக்கிறார்.

இரண்டாவதாக, கர்த்தராகிய பிதாவும் நானும் ஒன்றே என்று, ஒரு பெரிய குண்டைத்தூக்கிப் போட்டார். ஆபிரகாமுக்கு முன்பு நான் இருந்தது மட்டுமல்ல, பிதாவும் நானும் ஒன்றே என்றார் இயேசு. யோவான் 5:17ல் அதைப் பற்றி நாம் வாசிக்கிறோம். ஏன் யூதர்கள் அவரைக் கொல்லுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார்கள் என்கிற காரணம் உங்களுக்குத் தெரிகிறதா? அவருடைய வார்த்தைகளை யூத மதத்தையே கேவலப்படுத்தும் வார்த்தைகளாக யூதர்கள் கணித்தார்கள்.

இருந்தபோதும், இயேசு மனிதர் மட்டுமல்ல அல்ல, அவர் தேவன். அதைச் சொல்லுவதற்கு அவருக்கு மட்டுமே தகுதி இருக்கிறது, உரிமை இருக்கிறது. நானும் பிதாவும் ஒன்றே. யோவான் 10:30ல் "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்." மேலும் யோவான் 10:38ல், "பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள்" என்று இயேசு சொல்லுகிறார். எப்படி ஒரு யூதன் இதைச் சகித்துக்கொள்ளுவான்? அதனால்தான் அந்த யூதர்கள் அவரை வெறுத்தார்கள், அவரைக் கொல்ல முயற்சி செய்தார்கள், அவரை நிராகரித்தார்கள்.

நீங்களும் இதுவரை ஆண்டவர் இயேசுவை விசுவாசிக்காதவராக, அதாவது இரட்சிப்பு அடையாதவர்களாக இருந்தால் உங்களுக்குள்ளும் அவருக்கெதிரான எத்தனையோ எண்ணங்கள் இருந்து வரலாம். இயேசுவை இன்றுவரையும் விசுவாசிக்காமல் இருக்க ஏதோ காரணங்கள் இருக்கலாம். ஏதோ ஒன்று உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவரைத் தள்ளி வைத்திருக்கிறீர்கள். இன்னும் உங்கள் இருதயத்தை, இந்த யூதர்களைப்போல நீங்களும் ஆராய்ந்து பார்க்கவில்லை. இன்னும் நீங்கள் உங்களைக் கடவுள் முன் பாவிகளாகப் பார்க்காமல் இருப்பது அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

வேதம் விளக்குகிறபடி நான் அத்தனை மோசமானவன் இல்லையே, நான் என்ன வங்கியையா கொள்ளை அடித்துவிட்டேன்? யாரையாவது கொலையா பண்ணிவிட்டேன்? நான் பெரிய பாவி ஒன்றும் இல்லையே. சின்னச் சின்னப் பாவங்களைத் தானே செய்து வருகிறேன், இதற்காகவெல்லாம் ஆண்டவர் என்னை நரகத்துக்கு அனுப்பி

வைப்பாரா? அதனால் இன்னும் கொஞ்சக்காலம் தள்ளிப் போடலாம் என்று எண்ணி வாழ்கிறீர்கள். நாளை நம்முடைய கையிலா இருக்கிறது? நீங்கள் எப்படி நாட்களைத் தள்ளிப் போடப் போகிறீர்கள்? நாளை படுக்கையில் இருந்து கண்விழிக்க முடியாமல் போய்விட்டால் உங்கள் கதி என்னாவது? அதற்குப் பிறகு இரட்சிப்பு கிடைக்குமா? உங்களைப் பற்றி நீங்களே கொண்டிருக்கிற தவறான எண்ணங்கள், உங்களை நீங்கள் பாவிகளாகப் பார்க்க மறுக்கின்ற அந்த இருதயம் மிக மோசமானது.

ஆண்டவர் நீதிமான்களுக்காக நான் வரவில்லை என்று சொல்லுகிறார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? ஒருவனாகிலும் நீதிமான்கள் இல்லை. நீதிமான்கள் இருந்திருந்தால் நான் வரவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆனால் எல்லோரும் பாவிகளாக இருக்கிறீர்கள். உங்கள் பாவத்தை நீங்கள் பார்ப்பதற்கு உங்களுக்கு இருதயம் இடம் கொடுக்காவிட்டால், அவரால் உங்களுக்கு எந்த நன்மையும் இல்லை. ஆண்டவர் பெரியவர், அவர் பரலோகத்தில் இருக்கிறார், அவர் மகா பெரியவர், மகா பரிசுத்தர், இறையாண்மை உள்ள தேவன், நான் சாதாரண வெறும் பூச்சியைவிடக் கேவலமான ஒரு மனிதப் பிறவி, என்னில் நல்லது எதுவுமேயில்லை, நல்ல சிந்தனைகள் இல்லை, மனைவியைக்கூட முழுமனத்தோடு நேசிக்க முடியவில்லை, பிள்ளைகளை முழுமனத்தோடு நேசிக்க முடியவில்லை, எவ்வளவோ குற்றங்களையும் குறைகளையும் வைத்துக்கொண்டு நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறேன், அவர் கொடுத்தால் மட்டுமே இரட்சிப்பு என்று உங்களால் சொல்ல முடியாது.

உங்களைப் பாவியாகப் பார்க்க உங்கள் மனம் இடம் கொடுக்கவில்லை, அதற்காகவே நீங்கள் ஆண்டவரை நோக்கிக் கதறவேண்டும். என்றைக்கு உங்களைப் பாவிகளாகப் பார்க்கிறீர்களோ, “ஆண்டவரே, நான் மோசமானவன் கேடானவன் நன்மைகள் எதுவுமே என்னில் இல்லை, ஆண்டவர் இரட்சித்தால் மட்டுமே எனக்கு ஜீவன், ஆண்டவரே என்னுடைய பாவங்களை எல்லாம் பொறுத்து, பாவியாக நீர் கருதாமல் உம்முடைய நீதியின் அடிப்படையில் எனக்கு இரட்சிப்பை ஈவாகக் கொடும். ஆண்டவரே, நீர் கொடுத்தால் மட்டுமே என்னுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும்” என்று கதறுகிறவர்களுக்கு மட்டுந்தான் இரட்சிப்பு கிடைக்கும்.

நாகமானுக்கு அகங்காரம் இருக்கின்றவரையில் அவனுக்கு இரட்சிப்பு கிடைக்கவேயில்லை, அவனுடைய தொழுநோயும் தீரவேயில்லை. எப்போது அவனுடைய திமிர் அடங்கியதோ அப்போதுதான் அவனுக்கு விடுதலை வந்தது. அவனுடைய வேலையாட்கள் அவனோடு பேசி, ஐயா நீங்கள் எலிசா பெரிய காரியம் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள். ஆனால், அவர் உங்களை அடாவடியாக அந்த

அழுக்குத் தண்ணீரில் முழுகச் சொல்லிவிட்டார். சரி, அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. நமக்கு என்ன வேண்டும்? தொழு நோய் போகவேண்டும் அவ்வளவுதானே? அதற்காக நீங்கள் ஏன் அதைச் செய்யக்கூடாது? என்று சொன்னார்கள்.

கெட்ட குமாரனுக்கு புத்தி தெளிந்ததுபோல அப்போது நாகமானுக்கு புத்தி தெளிந்தது. கெட்டகுமாரன் அந்தப் பன்றிகள் சாப்பிடுகின்ற சாப்பாட்டைச் சாப்பிடுகிற நிலைக்கு வந்த பிறகுதான் அவனுக்குப் புத்தி தெளிந்தது. அதற்கு என்ன அர்த்தம்? அவன் பாவத்தை உணர ஆரம்பித்தான். தான் எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறேன் என்பதை நாகமானும் உணர்ந்து, எலிசா சொன்னதைச் செய்யத் தீர்மானித்து, தன்னுடைய உயர்வான ஆடம்பர நிலையை எல்லாம் மறந்துவிட்டு, ஒரு சாதாரண மனிதனைப்போல அந்த அழுக்கு நீரில் ஏழு தடவை மூழ்கி எழுந்தபொழுது அவனுடைய தொழுநோய் உடனடியாக நீங்கியது. அவனுக்கு இரட்சிப்பு கிடைத்தது. அந்த நிலைக்கு வராத ஒருவருக்குமே இரட்சிப்பு வீடு தேடி வராது.

ஆண்டவருக்கு முன்பு உங்களை எப்படிப் பார்க்க வேண்டும்? பாவியாகப் பார்க்க வேண்டும். இந்த உலகங்களை எல்லாம் படைத்து ஆளுகின்ற தேவன் இயேசு. அவருக்கு முன் நாம் கேவலமானவர்கள். இரட்சிப்பை அடைவதற்கு நாம் எந்தத் தகுதியும் இல்லாதவர்கள். நீங்கள் எப்போது பாவி என்று உணருகிறீர்களோ அப்போது ஆண்டவர் உங்கள் இருதயக் கதவைத் தட்டுகிறார் என்று அர்த்தம். அவரே அதைத் திறந்து வைப்பார், அவரே உள்ளே நுழைவார். ஆகவே என்ன செய்யப் போகிறீர்கள்? இந்த யூதர்களைப் போல சுயநலத்தாலும் பெருமையினாலும் அவரை நிராகரிக்கப் போகிறீர்களா? அல்லது நாகமானைப்போல அந்த தேவன் எனக்கு வேண்டும், என்னுடைய பாவங்களை என்னால் அகற்றிக்கொள்ள முடியாது. இந்த உலகப் படிப்பு அந்தப் பாவங்களைப் போக்காது. நான் எதைச் செய்தும் என்னுடைய பாவங்களை என்னால் நீக்கிக்கொள்ள முடியாது. இயேசு மட்டுமே என்னுடைய பாவங்களுக்காகச் சிலுவையில் தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி மரித்திருக்கிறார். அதைப் பிதா ஏற்றுக்கொண்டார். பாவிகளை நீதிமான்கள் ஆக்கக்கூடிய, அவர்களைப் பரிசுத்தப்படுத்தக்கூடிய ஒரே திருரத்தம் இயேசுவின் இரத்தமாக இருக்கிறது. அது முழுமையாகப் பாவிகளுடைய பாவங்களை நீக்கியது என்று நம்புகிறபோது, நீங்கள் உங்களைப் பாவிகளாகப் பார்க்கிறபோது, இயேசுவை நாடி மன்றாடி அந்த இரட்சிப்பிற்காக அவரிடம் வருகிறபோது அவர் இரட்சிப்பை இலவசமாக அளிக்கிறார்.

அந்த விதமாக உங்களுக்கு இரட்சிப்பு கிடைத்திருக்கிறதா? கிடைத்திருந்தால் சந்தோஷப்படுங்கள். அந்த இரட்சிப்புக்குரிய வாழ்க்கையை வாழுங்கள். இயேசுவினுடைய உதவியோடு,

ஆவியானவரின் துணையோடு வாழப் பாருங்கள். அந்த விதத்தில் உங்களுக்கு இரட்சிப்பு கிடைக்காமல் இருந்து, போலித்தனத்தோடு இரட்சிக்கப்பட்டவர்களாகப் பொய்யாக நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தால் உங்களுக்கு ஆபத்து காத்திருக்கிறது. அந்த இரட்சிப்பை உண்மையாக பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து அடையாதவரையும் நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. இரட்சிக்கப்பட்டவர்களுக்கு அந்த ஆவியானவரே அவர்களில் குடியிருந்து அவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்கிறார்.

கூட்டத்தில் கையை உயர்த்தியிருந்ததை எல்லாம் மறந்துவிட்டு ஆண்டவரை நாடி இரட்சிப்பிற்காக வாருங்கள். போதகர்களை நாடிப் போய் பிரயோசனம் இல்லை. சில பேர் ஐயோ! அவர் ஜெபம் பண்ணி எனக்கு கேன்சர் போய்விட்டது, அதனால் நான் ஆண்டவரை விசுவாசிக்கிறேன் என்பார்கள். ஆண்டவரைத் தேடி வந்த பத்துப் பேர் குஷ்டரோகம் பிடித்தவர்களாக இருந்தார்கள். அந்தப் பத்து பேரும் குணமடைந்தார்கள். ஒருவன் மட்டுமே ஆண்டவருக்கு நன்றி சொன்னான். மற்ற ஒன்பது பேரும் குணமடைந்த பொழுதும் அவர்கள் இரட்சிப்பை அடையாதவர்களாக இந்த உலகத்திலே வாழ்ந்து மரித்தார்கள். ஆகவே நோய் குணமடைந்தது இரட்சிப்புக்கு அடையாளம் அல்ல. ஒரு நோயிலிருந்து குணமடையலாம். பத்து வருஷங்களுக்குப் பின் இன்னொரு நோய் நமக்கு வரலாம். ஆகவே உடல் சுகத்துக்காக மட்டும் ஆண்டவர் வேண்டுமென்று கூட்டங்கூட்டமாக அலைந்து சுற்றிக் கொண்டிருந்தீர்களானால் நீங்கள் இரட்சிப்பை அடையாமல் இந்த உலகத்தில் அழிந்துபோகும் நிலை ஏற்படலாம். இந்த உலகத்து இன்பங்களுக்காக நாம் வாழக்கூடாது. இந்த உலகத்து சுகங்களுக்காக நாம் வாழக்கூடாது. அதற்கெல்லாம் அப்பாற்பட்ட பரலோகத்தின் நன்மைகளுக்காகத்தான் நமக்கு இரட்சிப்பு தேவை.

இரட்சிப்பு அடைந்தும் இந்த உலகத்தில் கேன்சர் வந்து எத்தனை கிறிஸ்தவர்கள் மரித்திருக்கிறார்கள் தெரியுமா? அதனால் என்ன? எல்லா மனுஷனுக்குந்தான் நோய் வருகிறது. நோய் அவிசுவாசிக்கும் வரும், விசுவாசிக்கும் வரும். அது உலக நியதி. ஆனால் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. இரட்சிப்பு அடையாமல் வாழ்ந்து மரிக்கிறவன் நரகத்துக்குப் போவான். இரட்சிப்பை அடைந்து ஒரு மனிதன் கேன்சரால் செத்தாலும் சரி, விபத்தில் அடிப்பட்டுச் செத்தாலும் சரி அவனுடைய ஆத்துமா பரலோகத்திற்கு உடனடியாக அந்த நிமிடமே போகின்றது. அதுதான் தேவையே தவிர உலக இன்பங்களுக்காக, உலக நன்மைகளுக்காக வாழாதீர்கள். இயேசு கொடுக்கின்ற இரட்சிப்பு நம்முடைய ஆத்துமா பரலோகம் போவதற்காக, அங்கு நாம் சரீரத்தோடு போகப் போவதில்லை. ஆகவே இந்த உலகத்தில் சரீரத்துக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. அந்த இயேசுவுக்காக இரத்தப்பலியாக மரித்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா?

பவுல், பேதுரு இவர்கள் எல்லாம் இரத்தப்பலியாக மரித்தவர்கள், இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள். அவர்கள் போன இடம் எது? பரலோகம். ஆண்டவர் அவர்களைத் தனக்குச் சாட்சி சொல்வதற்காக தேர்ந்தெடுத்திருந்தார்.

இந்த உலகத்தில நாம் நோயால் இறப்பதைப் பற்றிப் பெரிதாக நினைக்கக்கூடாது. அதுதான் ஆண்டவருடைய சித்தமாக இருந்தால் அப்படித்தான் நடக்கும். எது முக்கியம்? நம்முடைய ஜீவன் ஆண்டவரை அடைவதுதான் முக்கியம். ஆகவே உலக நன்மைகளுக்காக அலையாதீர்கள். சுவிசேஷத்தைக் கேட்டு இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, உண்மையான அந்த இரட்சிப்பை இயேசுவினிடத்திலிருந்து அடைந்திருக்கிறோமா என்று சிந்தித்துப் பாருங்கள். அப்படி அடைந்தவர்கள் தொடர்ந்து இந்த உலக நன்மைக்காக வாழாமல் ஆண்டவருக்காக வாழுங்கள், அந்த இயேசுவுக்காக வாழுங்கள். ஏனென்றால் இந்த உலகத்திலேயும் இயேசுவினுடைய ஐக்கியத்தை அனுபவித்து, அந்த பரலோகத்தில் அதைத் தொடர்ந்து அனுபவிக்கிற அந்த வாழ்க்கை இருக்கிறது. அது எவ்வளவு மேலானது தெரியுமா!

இரட்சிப்பு இயேசு கொடுப்பது, மனிதன் மனிதனுக்கு கொடுப்பதல்ல. அதைப் பணத்தால் வாங்கி கொள்ள முடியாது. ஆண்டவர் கிருபையாக தன்னுடைய அன்பினாலே, நித்தியத்திலேயே தம்மால் தெரிந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்காக, தன்னுடைய ஒரே குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி அவர்களுக்காக அந்த சிலுவையிலே அவரை மரிக்க வைத்து, அவர்களைத் தேடிப் பிடித்து அவர் இரட்சிப்பளித்து வருகிறார். காணாமல் போன அந்த ஒரே ஆட்டை இயேசு தேடிப் போனார். அதேபோல அந்த ஆடுகளைத் தேடித் தேடி அவர் இரட்சித்து வருகிறார்.

ஆண்டவருடைய ஆடுகளில் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்களா? இது நீங்கள் கேட்டுப் பார்க்க வேண்டிய கேள்வி. ஆண்டவர் உங்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கட்டும். இரட்சிப்பு அடையாதவர்களுக்கு அந்த அழிவில்லாத இரட்சிப்பை கொடுக்கட்டும். அவரை நோக்கிப் போங்கள். மனுஷர்களை நோக்கிப் போகாதீர்கள். நீங்கள் எந்த இடத்திலும் எந்த நிலையில் இருந்தாலும் ஜெபம் பண்ணினால் அந்த இயேசு அதைக் கேட்கிறவராக இருக்கிறார். அந்த இரட்சிப்பை நீங்கள் அடைய மனிதர்கள் யாரும் தேவையில்லை. நீங்களே அவரோடு பேசலாம். அவர் அந்த இரட்சிப்பைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். தன்னை நாடி வருகிறவர்களுக்கு, பாவிகளாகத் தங்களை உணர்கிறவர்களுக்கு, நாகமானைப் போலத் தன்னை தாழ்த்தி, ஆண்டவரே என் மீது கிருபை பாராட்டும் என்று கேட்கிறவர்களுக்கு அவர் அந்த ஜீவனைத் தருகிறவராக இருக்கிறார். அந்த இயேசுவை நாடிப் போங்கள்.

# திரித்துவம்

வேதத்தின் அடிப்படைப் போதனைகளின் ஒன்று திரித்துவம். அடிப்படைப் போதனைகளிலேயே கிறிஸ்தவம் தங்கியிருக்கின்றது. அப்போதனைகளில் ஒருபோதுமே கிறிஸ்தவர்களுக்கு குழப்பங்கள் இருக்கக் கூடாது; அவற்றில் எதையும் அவர்கள் நிராகரிக்கவும் கூடாது. அடிப்படைப் போதனைகளை மாற்றியமைக்கிறவர்களையும் நிராகரிக்கிறவர்களையுமே திருச்சபை எப்போதும் போலிப்போதனையாளர்களாக இனங்கண்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை கொண்டு வந்திருக்கின்றது.

இத்தகைய அடிப்படைப் போதனைகளுக்கு ஆபத்து ஏற்பட்ட காலங்களிலேயே திருச்சபை சபைத் தலைவர்களைக் கூட்டி அடிப்படைப் போதனைகளைப் பாதுகாக்கும் விதத்தில் துல்லியமாக ஆராய்ந்து எழுதப்பட்ட அறிக்கைகளை வரலாற்றில் வெளியிட்டு வந்திருக்கின்றனர். அத்தகைய அறிக்கைகள் இன்றுவரை திருச்சபைகளுக்குப் பாதுகாப்பாக இருந்து வருகின்றன. கிறிஸ்தவ வரலாற்றையும், விசுவாச அறிக்கைகளையும் ஒதுக்கி வைப்பவர்கள் எப்போதுமே கிறிஸ்தவ சபைக்கு ஆபத்தானவர்கள் என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் கர்த்தர் எழுப்பிப் பயன்படுத்தியிருக்கும் கிறிஸ்தவ ஞானவான்களின் ஞானத்தையும், விவேகத்தையும் பயன்படுத்திக் கொள்ள மறுக்கும் ஞானசூன்யங்களால் திருச்சபைக்கு எப்போதுமே ஆபத்துதான்.

நம்மினத்தில் திரித்துவப் போதனையை அநேகர் தெளிவாக அறிந்திருக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம், அதுபற்றிய தெளிவான வேதபூர்வமான போதனைகளை அளிப்பவர்கள் இல்லாததுதான். உதாரணத்திற்கு, இயேசு பெயரில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று வாதிடும் ஒரு கூட்டம் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. இது எத்தனை பெரிய தவறு என்பதை அவர்கள் உணரவில்லை. மத் 28ல் இயேசு தந்திருக்கும் பிரதான கட்டளையில் திரித்துவ ஆள்தத்துவங்களின் பெயரில் ஞானஸ்நானம் அளிக்கும்படி இயேசுவே கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய கட்டளைக்கெதிராக செயல்படுவது எத்தனை ஆபத்து தெரியுமா? அத்தோடு இயேசுவை மட்டுமே வலியுறுத்திப் பேசுவதும், அவருடைய கட்டளையை மீறி அவர் பெயரில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க முயல்வதும் திரித்துவத்தின் ஏனைய ஆள்தத்துவங்களான பிதா, பரிசுத்த ஆவி ஆகியோரை அலட்சியப்படுத்தி நிராகரிப்பதற்கு ஒப்பாகும் என்பதையும் அவர்கள் உணராதிருக்கிறார்கள். யெகோவாவை முதன்மைப்படுத்தி,

இயேசு கிறிஸ்துவைத் தாழ்த்துவதாலேயே யெகோவாவின் சாட்சிகளைப் போலிப்போதனையாளர்களாகக் கருதுகிறோம்.

வேறொரு பகுதியினர் பரிசுத்த ஆவிக்கு மட்டுமே முக்கியத்துவ மளிப்பார்கள். பிதாவையும் குமாரனையும் அலட்சியப்படுத்துமளவுக்கு அவர்கள் பரிசுத்த ஆவிக்கு முக்கியத்துமளிக்கிறார்கள். இவ்வாறு செய்வது தேவனுக்குப் பிடிக்காத செயல். நாம் ஆராதித்து வாழவேண்டியது திரித்துவ தேவனைப் பின்பற்றியே. அதனால் திரித்துவத்தின் மூன்று ஆள்தத்துவங்களுக்கும் சபையிலும், வாழ்க்கையிலும் சமமான இடமளித்து செயலாற்ற வேண்டியது நம் கடமை.

### 1. திரித்துவமாகிய கடவுள்

திரித்துவத்தைப் பற்றிப் படிக்கின்றபோது நாம் "கடவுள் யார்?" என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே நம்மை அவருடைய ஆள் தத்துவங்களைப் பற்றி ஆராய வைக்கிறது.

கிறிஸ்தவத்தை எது கிறிஸ்தவமாக்குகிறதென்றால் அது திரித்துவப் போதனையே. திரித்துவம் பற்றிய போதனையை உலகத்தில் எந்த மதத்திலும் காணமுடியாது. அதனால்தான் இதைப் புரிந்துகொள்ள உலக மதக் கருத்துக்களையோ அல்லது உலகத்து உதாரணங்களையோ நாம் பயன்படுத்தக் கூடாது.

ஹிப்போவின் ஆகஸ்தீன், இதுபற்றி விளக்கும்போது, "வேறு எந்த சத்தியங்களையும்விடத் திரித்துவப் போதனையிலேயே கள்ளப்போதனை மிகவும் ஆபத்தானது. திரித்துவமே ஆராய்வதற்கு மிகவும் கடினமானது. இதைப்பற்றிய சத்தியத்தில் தேர்ச்சி பெறுவது மிகவும் பிரயோஜனமானது" என்று கூறியிருக்கிறார். திரித்துவப் போதனையில் ஏன் கள்ளப்போதனை ஆபத்தானது? திரித்துவப் போதனை நேரடியாக கடவுளைப் பற்றிய போதனையாதலால் அது பற்றிய கள்ளப்போதனை கடவுளை அவரிருக்கும் நிலையில் இருந்து உருமாற்றி விளக்குகிறது. கடவுளை அவர் காணப்படும் விதத்தில் நாம் அறிந்து உணர்ந்து ஆராதிக்க வேண்டும். அதற்கு மாறான ஆராதனை வேறு எவருக்கோ அளிக்கப்படும் ஆராதனை. அதனால்தான் ஆகஸ்தீன் இவ்வாறு கூறியிருக்கிறார்.

தற்கால இறையியல் அறிஞரான சின்கிளெயர் பேர்கசன் திரித்துவத்தைப் பற்றி விளக்கும்போது, "இயேசுவின் சீடர்கள் மிகப்பெரிய பணிக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, அவர் மேலறையில் (Large furnished upper room; Matt 26:18-19; Mark 14:15; Luke 22:12) திரித்துவம் பற்றிய இரகசியத்தை அவர்களுக்கு விளக்குவதிலேயே அதிகமான நேரத்தைச் செலவிட்டிருக்கிறார். நடைமுறைக் கிறிஸ்தவத்திற்கு திரித்துவப் போதனை எந்தளவுக்கு அவசியமானது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்கு இதைவிட ஆணித்தரமானது வேறொன்றுமில்லை என்பதை நான்

அடிக்கடி எண்ணிப் பார்த்திருக்கிறேன்” என்கிறார். (யோவான் 13–17 அதிகாரங்களில் விளக்கப்பட்டிருப்பவை மேலறையில் நிகழ்ந்தவை.)

இன்னுமொரு இறையியலறிஞரான ரொபட் லேத்தம், “இந்த மேலறையும், அப்போ 1ல் குறிப்பிடப்பட்ட மேலறையும் ஒன்றா என்பதற்கான வேத ஆதாரங்கள் இல்லை. இருந்தபோதும் இறையியல் ரீதியான தொடர்பை இரண்டிற்குமிடையில் காணலாம். யோவான் 13–17 வரையுள்ள பகுதியில் இயேசு பரிசுத்த ஆவியைப் பற்றிய வாக்குத்தத்தத்தைத் தருகிறார். அப்போ 1:8ல் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அந்தவகையில் ஒரு தொடர்பைக் காண்கிறோம்” என்று விளக்கியிருக்கிறார் (The Holy Trinity, pg 375).

ஆனால், இந்தத் திரித்துவப் போதனையையே அநேக கிறிஸ்தவர்கள் விளங்கிக்கொள்ள முடியாதிருக்கிறார்கள். அத்தோடு அதை விளக்குவதில் மிகவும் பலவீனமாகவும் இருக்கிறார்கள். தமிழினத்துப் போதகர்களிடமும் இதே நிலைதான். அதற்கும் மேலாக நம் வாழ்க்கையில் இது எந்தளவுக்கு முக்கியமாக இருக்கிறது என்பதை அநேகர் தெரிந்திராமலும், உணராது மிருக்கிறார்கள். திரித்துவப் போதனை நம்முடைய தியானத்திற்கும் ஆனந்தத்திற்கும் மிக முக்கியமானது.

வரலாற்றில் எழுந்திருக்கும் திருச்சபை விசுவாச அறிக்கைகள் திரித்துவத்தை மையமாகக் கொண்டே அமைந்திருக்கின்றன.

அப்போஸ்தல விசுவாச அறிக்கையின் போதனையை (Apostle’s Creed) திரித்துவத்தின் அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. நான் பிதாவாகவிருக்கும் கடவுளை விசுவாசிக்கிறேன்.
2. நான் அவருடைய ஒரே குமாரனும் நமது ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.
3. நான் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்.

வரலாற்றில் எழுந்துள்ள இன்னுமொரு விசுவாச அறிக்கையான அத்தனேசியஸின் விசுவாச அறிக்கை பின்வருமாறு விளக்கமளிக்கிறது, “இதுவே கிறிஸ்தவ நம்பிக்கை: நாம் திரித்துவத்தின் மூலம் ஒரே கடவுளை ஆராதிக்கிறோம்; திரித்துவம் ஒருங்கிணைந்தது, அதன் ஆள்தத்துவங்கள் கலக்காமலும், அவர்களின் சாரம் பிரிவற்றதாகவும் காணப்படுகின்றது. பிதாவின் ஆள்தத்துவம் தனித்துவமான ஆள்தத்துவம். குமாரனின் ஆள்தத்துவம் இன்னொருவர். பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவம் வேறொருவர். ஆனால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் தெய்வீகம் ஒன்றே; அவர்களுடைய மகிமை சமமானது; அவர்களுடைய மாட்சிமை நித்தியமானது.”

இன்னுமொரு விசுவாச அறிக்கையான பெல்ஜிக் விசுவாச அறிக்கை குறிப்பிடுவதைக் கவனியுங்கள், "திரித்துவம் பற்றிய வேதபோதனையின்படி நாம் தனியானதொரு சாரத்தைக் கொண்டிருக்கும் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம். அவரில், மெய்யாகவும், உண்மையாகவும், நித்தியத்திற்கும், தங்களுடைய பகிர்ந்துகொள்ள முடியாத குணாதிசயங் களின்படி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராக தனித்துவமான மூன்று ஆள்தத்துவங்கள் காணப்படுகிறார்கள்."


நாம் வரலாற்றுபூர்வமாகவும், வலுவானதாகவும், முழுமையாக வேதபூர்வமானதுமான கடவுளைப் பற்றிய புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்க வேண்டுமானால் அவரை ஒன்றில் மூவராகவும், மூவரில் ஒருவராகவும் அறிந்திருக்க வேண்டும். அவரைத் திரித்துவ தேவனாக அறிந்திருக்க வேண்டும். திரித்துவத்தை விளக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தைப் பிரயோகங்கள் சிக்கலானவையாகத் தோன்றினாலும் இந்தப் போதனையை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும், ஏன், முழுமையாகப் புரிந்துகொள்ளவும் முடியும். அதற்கு நாம் செய்யவேண்டியதெல்லாம் சிந்திப்பதற்கும், வேதம் திரித்துவம் பற்றித் தரும், ஒரே தேவன், அவரில் மூன்று தெய்வீக ஆள்தத்துவங்கள் எனும் போதனையைப் பாதுகாப்பதற்காக மிகவும் கடுமையாக உழைத்திருக்கும் நமக்கு முன்பு வாழ்ந்து மரித்திருக்கும் பெரியவர்களின் குரல்களைக் கேட்பதற்கும், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

## 2. வேதத்தில் திரித்துவம்

திரித்துவப் போதனையை சுருக்கமாக ஏழு உண்மைகளாக விளக்கலாம்:

1. கடவுள் ஒருவரே – There is only one God
2. பிதா கடவுள் – The Father is God
3. குமாரனும் கடவுள் – The Son is God
4. பரிசுத்த ஆவியானவரும் கடவுள் – The Holy Spirit is God
5. பிதா குமாரனில்லை – The Father is not the Son
6. குமாரன் பரிசுத்த ஆவியானவர் இல்லை – The Son is not the Father
7. பரிசுத்த ஆவியானவர் பிதா இல்லை – The Holy Spirit is not the Father

இதற்கான வரைபடம்




இதுவரை வரலாற்றில் திருச்சபையால் எழுதப்பட்டுள்ள அனைத்து விசுவாச அறிக்கைகளும், திரித்துவத்தை விளக்குவதற்கு நுணுக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இறையியல் வார்த்தைப் பிரயோகங்களும், தத்துவரீதியிலான திரித்துவப் பாதுகாப்புக்கான வாதாடல்களும் மேற்குறிப்பிட்ட ஏழு உண்மைகளிலும் ஒன்றையும் நிராகரித்துவிடாமல் அனைத்தையும் பாதுகாப்பதற்காகத்தான் இருந்து வருகின்றன. வரலாற்றில் எழுந்துள்ள விசுவாச அறிக்கைகள், வேதத்தில் காணப்படாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி சத்தியம் பற்றிய உண்மைகளை மிகக் கவனத்தோடு நுணுக்கமாக விளக்கவேண்டும் என்று வலியுறுத்தும்போது, வேதத்தில் காணப்படாதவற்றை நமக்குப் புரியவைப்பதற்காக அவற்றை வலியுறுத்தவில்லை. மாறாக சத்தியத்தைப் பாதுகாப்பதற்காகவும், நுணுக்கமாக விளக்குவதற்காகவும், அடிப்படை வேத விளக்கங்களைத் தெளிவாக விளக்குவதற்காகவுமே அவற்றை வலியுறுத்துகின்றன.

திரித்துவம் என்ற வார்த்தையை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் மூன்றாம் நூற்றாண்டு இறையியலறிஞரான டேர்டூலியன். அதற்கான இலத்தீன் வார்த்தை Trinitas - Threeness என்பது. இவ்விறையியல் வார்த்தை திரித்துவப் போதனையை இலகுவாக விளக்குவதற்காக உருவாக்கப்பட்டது. அவ்வாறு வார்த்தைப் பிரயோகங்களை உருவாக்குவது இறையியல் விளக்கத்திற்கு அவசியமானது. இது

வேதத்தில் காணப்படவில்லை என்பதற்காக இது திணிக்கப்பட்ட ஒரு வார்த்தைப் பிரயோகமல்ல. இது விளக்கும் போதனை ஆணித்தரமாக வேதத்தில் விளக்கப்பட்டிருக்கும் கர்த்தரைப் பற்றிய போதனை. சில ஞானசூனியங்கள் இவ்வார்த்தை வேதத்தில் காணப்படவில்லையே என்று குரல் எழுப்புவார்கள். அது அவர்களுடைய அறியாமையின் அறிகுறி.

திரித்துவம் பற்றிய போதனை வேதத்தில் பல பகுதிகளில் காணப்படுகின்றது. அப்போதனைகளைப் பெற்றுக்கொள்ள நாம் வேதவிளக்க விதிகளைப் பின்பற்றவேண்டும். அதாவது, திரித்துவம் பற்றிய போதனை வேதத்தில் உள்ளடக்கமாகத் தரப்பட்டிருப்பதால் அது தொடர்பான பகுதிகளைத் தொகுத்து ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அவற்றில் கொடுக்கப்பட்டிருக்கும் போதனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சோம்பேரிகளும், வேதத்தை ஆராய்ந்து படிப்பதில் கருத்தற்றவர்களாக இருப்பவர்களுக்கும் இந்தப் பயிற்சியை அலட்சியம் செய்வார்கள். அதனாலேயே அவர்கள் வேதத்தில் நல்லறிவில்லாதவர்களாக இருந்து வருகிறார்கள்.

கீழே நான் தந்திருக்கும் வழிமுறையின்படியே திரித்துவப் போதனையை வேதத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

### *(1) கடவுள் ஒருவர் என்பதைக் காட்டும் வசனங்களைக் கவனியுங்கள்:*

*உபாகமம் 6:4 – இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.*

*ஏசாயா 44:6 – நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்.*

*1 தீமோத்தேயு 1:17 – நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*

மேல் வரும் வசனங்கள் கடவுள் ஒருவரே என்பதை விளக்குகின்றன. இதுபோல் மேலும் அநேக வேதபகுதிகள் இந்த உண்மையை விளக்குகின்றன. அதனால், கடவுள் ஒருவர் மட்டுமே என்பது திரித்துவப் போதனைக்கு அடிப்படை.

### *(2) கடவுள் பிதாவாக இருக்கிறார்*

*யோவான் 6:27 – அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே*

கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

தீத்து 1:2 – பிதாவாகிய தேவனாலும்

மேல்வரும் வசனங்கள் தேவன் பிதாவாக இருக்கிறார் என்பதை விளக்குகின்றன.

### (3) குமாரனின் தெய்வீகம்

யோவான் 1:1 – ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

யோவான் 8:58 – அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கொலோசெயர் 2:9 – ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது.

எபிரெயர் 1:3 – இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.

தீத்து 2:13 – நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

லூக்கா 24:52 – அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து.

(இவ்வசனத்தில் “பணிந்துகொண்டு” என்ற வார்த்தைகளுக்கு “ஆராதித்து” என்று அர்த்தம். சீடர்கள் இயேசுவைக் கடவுளாக ஆராதித்தார்கள்.)

யோவான் 20:28 – தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.

மாற்கு 2:7 – இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

(இயேசு பாவங்களை மன்னிக்கிறவராக இருப்பதால் அவர் தெய்வீகமுள்ள தேவன்.)

### (4) பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்தை விளக்கும் பகுதிகள்

*எபிரெயர் 9:14 – நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச் சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*

*அப்போஸ்தலர் 5:3–4 – பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.*

*1 கொரிந்தியர் 3:16 – நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறா ரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*

*1 கொரிந்தியர் 6:19 – உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?*

மேல்வரும் வசனங்களைக் கூர்ந்து கவனித்தால் அவற்றில் பரிசுத்த ஆவியானவர் நித்திய ஆவியாகவும், தேவனுடைய ஆவியாகவும், தேவனாகவும் குறிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். இவை எந்த விளக்கத்தையும் தராமல் நேரடியாக சத்தியத்தை முன்வைக்கின்றன.

### (5) ஒருவரில் மூவர் இருப்பதாக விளக்கும் வசனங்கள்

*ஆதியாகமம் 1:1–3; சங்கீதம் 2:7; தானியேல் 7:9–14. மூவரைப் பற்றியும் அவர்களிடம் காணப்படும் சம அதிகாரத்தைப் பற்றியுமான வசனங்கள். இவை அவர்களுடைய தனித்துவமான ஆள்தத்துவத்தை அனுமானிக்கின்றன – மத்தேயு 28:19; 2 கொரிந்தியர் 2:21–22; 13:14; கலாத்தியர் 4:6; 1 பேதுரு 1:1–2. எபேசியருக்கெழுதப்பட்ட நிருபத்தில் மூவரையும் ஒரே நேரத்தில் விளக்கும் அநேக பகுதிகள் காணப்படுகின்றன. 1:13–14; 2:18; 20–22; 3:14–17; 4:4–6; 5:18–20; 6:10–18.*

மேலே திரித்துவத்தைப் பற்றித் தரப்பட்டிருக்கும் ஏழு சத்தியங்களும் கல்விமான்களாகிய இறையியலறிஞர்களால் உருவாக்கப்பட்டவையல்ல. அவை நிராகரிக்கவோ, உதாசீனப்படுத்தவோ, மறுதலிக்கவோ முடியாதபடி அநேக வேத வசனங்களால் உறுதிப்படுத்தப்பட்டவை. இவற்றை நாம் அறிந்திருந்து விளங்கிக்கொள்ளவும், விளக்கவும் செய்வதோடு இவற்றைச் சிந்தித்துப் பார்த்து மகிழவும் வேண்டும்.

# சீர்திருத்த வெளியீடுகள்

| எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் | விலை (இந்திய ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 40.00 |
| 2. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 20.00 |
| 3. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 50.00 |
| 4. | அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள் | A.N. மார்டின் | 90.00 |
| 5. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 80.00 |
| 6. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் (மறுபதிப்பு) | ஆர். பாலா | 50.00 |
| 7. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 90.00 |
| 8. | ஆதிசபையின் அற்புத வரங்கள் | ஆர். பாலா | 80.00 |
| 9. | திருச்சபை வரலாறு (பாகம் 1) | ஆர். பாலா | 140.00 |
| 10. | திருச்சபை வரலாறு (பாகம் 2) | ஆர். பாலா | 140.00 |
| 11. | கிறிஸ்தவ வினாவிடைப் போதனைகள் | ஆர். பாலா | 80.00 |
| 12. | உப்புத் தன் சாரத்தை இழந்தால் . . . | மொரிஸ் ரொபட்ஸ் | 15.00 |
| 13. | மதில் மேல் பூனை | A.N. மார்டின் | 15.00 |
| 14. | இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை? | A.N. மார்டின் | 15.00 |
| 15. | உன்னைப்பற்றிய குற்றப்பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் | A.N. மார்டின் | 15.00 |
| 16. | சீர்திருத்த விசுவாசமும் கிருபையின் போதனைகளும் | ஆர். பாலா | 60.00 |
| 17. | கிறிஸ்தவன் யார்? | A.N. மார்டின் | 40.00 |
| 18. | வில்லியம் கேரி | ஆர். பாலா | 80.00 |
| 19. | ஜோன் பனியன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 20. | ஜோன் ஓவன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 21. | இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் | ஆர். பாலா | 140.00 |
| 22. | 1689 விசுவாச அறிக்கை | ஆர். பாலா | 60.00 |
| 23. | சட்டையை விற்றாவது புத்தகத்தை வாங்கு | ஆர். பாலா | 80.00 |
| 24. | சீர்திருத்த இறையியலின் தந்தை - ஜோன் கல்வின் | ஆர். பாலா | 80.00 |
| 25. | தேவபயம் | A.N. மார்டின் | 140.00 |
| 26. | தேவகோபம் | ஆர். பாலா | 140.00 |
| 27. | பக்திவைராக்கியம் | டேவிட் மெரேக் | 180.00 |
| 28. | பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் | ஆர். பாலா | 90.00 |
| 29. | பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல் | ஆர். பாலா | 180.00 |
| 30. | மனித சித்தம் | ஆர். பாலா | 180.00 |
| 31. | பாவம் பொல்லாதது | ரால்ப் வென்னிங் | 150.00 |
| 32. | தோமா கிறிஸ்தவம் | ஆர். பாலா | 220.00 |
| 33. | ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு | ஜெ. சி. ரைல் | 120.00 |
| 34. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 150.00 |
| 35. | விதை நிலங்களின் உவமை | ஆர். பாலா | 160.00 |

# புதிய வெளியீடுகள்

## குடும்ப ஆராதனை

(திருத்தி விரிவாக்கப்பட்ட பதிப்பு)




## விதை நிலங்களின் உவமை





# மறுபதிப்பு

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்




இன்றைய சிறுவர்களே நாளைய சபையை அலங்கரிக்கப்போகும் தலைவர்களும், ஆத்துமாக்களுமாவர். அவர்கள் இன்று வேத அறிவில் வளருவது மிக அவசியம். அதற்கு இந்நூல் பயன்படும் என்ற நம்பிக்கையோடு கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடி இதை வெளியிட்டுள்ளோம்.

# திருமறைத்தீபம் சிறப்புப் பதிப்புகள்




1995-2001
910 பக்கங்கள், ரூ. 950

2002-2004
610 பக்கங்கள், ரூ. 750

2005-2007
604 பக்கங்கள், ரூ. 750

2008-2010
604 பக்கங்கள், ரூ. 750

2011-2014
792 பக்கங்கள், ரூ. 950

2015-2017
608 பக்கங்கள், ரூ. 750

2018-2020
544 பக்கங்கள், ரூ. 750

2021-2023
604 பக்கங்கள், ரூ. 750

உங்கள் பிரதிக்கு தொடர்புகொள்ளுங்கள்:
சீர்திருத்த வெளியீடுகள், சென்னை
+91 9445671113

BIBLE LAMP
திருமறைத்தீபம்

# திருமறைத்தீபம்

மலர் 32 ஜனவரி – மார்ச் 2026 இதழ் 1


1. இணையக் கூட்டமா? உள்ளூர் திருச்சபையா? 1
2. இரட்சிப்பின் மகத்துவம் 21
3. திரித்துவம் 40


## திருமறைத்தீபம் புதிய இணைய தளம்



இத்தளம் பற்றிய உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும்விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.

http://www.biblelamp.org

Bible Lamp
BalaR

திருமறைத்தீபத்தின் புதிய Android செயலியை Google play store ல் இருந்து பதிவிறக்கம் செய்ய, இந்த QR code ஐ scan செய்யவும்.

திருமறைத்தீப ஆசிரியரின் பிரசங்கங்கள் மற்றும் வேதபாடங்களைத் தற்போது YouTube ல் கேட்கலாம்.

திருமறைத்தீபம் YouTube TV
@Biblelamp